

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 157 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – தை 04 – வியாழக்கிழமை 18 ஜனவரி 2024 – வெளியீர் 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 157: Thiruvalluvar Year - 2055 - Thai 04 - Thursday 18 January 2024 - Dak 12 Pages ₹ 5.00


# புத்தாக்கத் தொழில்; சிகரத்தில் தமிழ்நாடு!



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 15.1.2024 அன்று தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை முன்னிட்டு, கோபாலபுரம் இல்லத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் திருமதி துர்கா ஸ்டாலின் உள்ளார்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்

**சென்னை, ஜன. 18 -**

**புத்தாக்க தொழில் நிறுவனங்களுக்கு உகந்த சூழலை உருவாக்கித் தருவதில் தமிழ்நாடு சிகரத்தில் இருப்பதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பக்கத்தில் பெருமிதம் பொங்கக் குறிப்பிட்டுள்ளார்.**

புத்தாக்க தொழில்களுக்கு உகந்த சூழல் ஏற்படுத்துவதில் தமிழ்நாடு முதலிடம்.

வளர்ந்து வரும் தொழில் முனைவோருக்கு உகந்த சூழலை உருவாக்கித் தருவதில் மிகச் சிறந்து விளங்கும் மாநிலங்களின் தர வரிசைப் பட்டியலை, ஒன்றிய தொழில் நிறுவனங்கள் மற்றும் உள்நாட்டு வர்த்தக ஊக்குவிப்பு துறை வெளியிட்டுள்ளது.

தொழில் நிறுவனங்களுக்கான ஆதரவு, புதிய கண்டுபிடிப்புகளை ஊக்குவித்தல், சந்தைப் படுத்துதலை எளிமையாக்குதல், நிதி ஆதரவு திட்டங்கள் உள்பட 25 காரணிகள் ஆய்வு செய்யப்பட்டு, அதன் அடிப்படையில் மிகச் சிறந்த மாநிலங்கள் தர வரிசை பட்டியல் வெளியிடப்பட்டுள்ளன.

இந்த பட்டியலில் 2018 ஆம் ஆண்டு, கடைசி தர நிலையில் இருந்த தமிழ்நாடு 2022 ஆம் ஆண்டிற்கான தர வரிசையில் முதலிடத்தை அடைந்துள்ளது. TANSEED புத்தொழில் ஆதார நிதி, பட்டியலினத்தவர் தொழில் நிதியம், LaunchPad நிகழ்வுகள் ஆகிய முயற்சிகளால் தமிழ்நாடு முதலிடத்தை பிடித்துள்ளது.

தமிழ்நாட்டில் ஏழாயிரத்து 600 ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் உள்ளன இவற்றில் 2022 ஆம் ஆண்டு மட்டும் 2 ஆயிரத்து 250 நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

பெண்கள் தலைமையிலான ஸ்டார்ட் அப் நிறுவனங்களில் 140க் கும் மேற்பட்ட நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. முதலிடம் பிடித்ததற்கான சான்றிதழை, தமிழ்நாடு ஸ்டார்ட் அப் நிறுவனங்களின் தலைமை செயல் அதிகாரி சிவராஜாவிடம், ஒன்றிய அமைச்சர் பியூஷ் கோயல், வழங்கினார்.

இந்த தர வரிசைப்பட்டியலில் குஜராத், கர்நாடகா, கேரளா மற்றும் இமாச்சல பிரதேசம் ஆகிய மாநிலங்களும் இடம்பிடித்துள்ளன.

அதன்படி புத்தாக்க நிறுவனங்களுக்கு உகந்த சூழலை உருவாக்கித் தருவதில் மிகச் சிறந்து விளங்கும் மாநிலங்களின் பட்டியலில் தமிழ்நாடு இடம் பெற்றுள்ளது.

இதுதொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் சிகரத்தில் தமிழ்நாடு உள்ளதாக பெருமிதம் பொங்க குறிப்பிட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலை தளப் பதிவு வருமாறு : -

**StartUp தரவரிசைப் பட்டியலில், கடந்த ஆட்சிக் காலத்தில் 2018இல் கடைசித் தரநிலையில் இருந்த தமிழ்நாடு,**

**நமது திராவிட மாடல் ஆட்சியில் 2022ஆம் ஆண்டுக்கான தர வரிசையில் முதலிடத்தை அடைந்துள்ளது!**

**TANSEED புத்தொழில் ஆதார நிதி, பட்டியலினத்தவர் / பழங்குடியினர் தொழில் நிதியம், LaunchPad நிகழ்வுகள் என ஒட்டுமொத்தமாக நமது அரசு முன்னெடுத்த மறுசீரமைப்பு முயற்சிகளாலேயே தமிழ்நாடு இன்று சிகரத்தில் அமர்ந்துள்ளது.**

**தமிழ்நாட்டில் தற்போது 7600 StartUp நிறுவனங்கள் உள்ளன. அவற்றுள் 2022ஆம் ஆண்டில் மட்டும் 2250 நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்பதே நாம் நிகழ்த்திய பாய்ச்சலுக்குச் சான்று. இந்தச் சாதனை மாற்றத்தைச் சாத்தியமாக்க உழைத்த அமைச்சர் தா.மோ.அன்பரசன் அவர்களுக்கும், அதிகாரிகளுக்கும் எனது பாராட்டுகள்! இந்த இடத்தைத் தக்கவைக்கவும் மேலும் உயரங்களைத் தொட உழைக்கவும் வேண்டுகிறேன்!**

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது சமூக வலை தளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

### பிரதமர் மோடி 2 நாள் பயணமாக நாளை சென்னை வருகை!

## கேலோ இந்தியா போட்டியை துவக்கி வைக்கிறார் பிரதமர்!

### பிரதமர் வருகையை ஒட்டி சென்னையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரம்!

புதுடெல்லி, ஜன. 18 –

கேலோ இந்தியா போட்டியை துவக்கி வைப்பதற்காக, பிரதமர் மோடி, இரண்டு நாள் பயணமாக, வரும் வெள்ளிக்கிழமை, சென்னை வருகிறார். பிரதமர் வருகையொட்டி சென்னையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப் பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் சென்னை, திருச்சி, மதுரை, கோவை ஆகிய இடங்களில் வரும் 19 ஆம் தேதி முதல், 31 ஆம் தேதி வரை, கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள் நடக்க உள்ளன. விளையாட்டுப் போட்டிகளில், 6,000க்கும் மேற்பட்ட வீரர், வீராங்கனைகள், ஆயிரத்து 600 பயிற்சியாளர்கள், 1,000 நடுவர்கள் பங்கேற்க உள்ளனர்.

கேலோ இந்தியா போட்டியை துவக்கிவைக்க வருமாறு பிரதமர் மோடிக்கு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், டெல்லிக்கு நேரில் சென்று அழைப்பு விடுத்தார்.

இதனையடுத்து, வரும் வெள்ளிக்கிழமை, தனி விமானத்தில் சென்னை வரும் பிரதமர் மோடி, நேரு உள்விளையாட்டு அரங்கில் கேலோ விளையாட்டுப் போட்டியை தொடங்கி வைக்கிறார்.

இரவு ஆளுநர் மாளிகையில் தங்கி விட்டு, மறுநாள் டெல்லி புறப்பட்டு செல்கிறார். பிரதமரின் இரண்டு நாட்கள் சென்னை பயணத்தை ஒட்டி, சிறப்பு பாதுகாப்பு படையைச் சேர்ந்த எஸ்.பி.ஜி., ஐ.ஜி. லவ்குமார் தலைமையில், சுமார் 20 எஸ்.பி.ஜி. பாதுகாப்புபடை அதிகாரிகள், சென்னை வந்தனர்.

இதனைத் தொடர்ந்து, எஸ்.பி.ஜி., ஐ.ஜி. லவ்குமார் தலைமையில், சிறப்பு பாதுகாப்பு ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் தமிழ்நாடு அரசு உயர் அதிகாரிகள், எஸ்.பி.ஜி. அதிகாரிகள், முக்கிய பிரமுகர்கள் பாதுகாப்பு அதிகாரிகள், மத்திய தொழில் பாதுகாப்பு படை அதிகாரிகள், சென்னை விமான நிலைய உயர் அதிகாரிகள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

# அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு போட்டியை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

**மதுரை, ஜன. 18 -**

**தமிழர் திருநாளாம் தைப் பொங்கலையொட்டி, உலகப் புகழ் பெற்ற மதுரை அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு தொடங்கியது. அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஜல்லிக்கட்டை தொடங்கி வைத்தார். மேலும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டின் வீர விளையாட்டான ஜல்லிக்கட்டைப் போற்றுவோம், பாதுகாப்போம் என தனது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.**



உலக பிரசித்திப் பெற்ற மதுரை அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன் அமைச்சர்கள் பி.மூர்த்தி, அனிதா ராதாகிருஷ்ணன், மாவட்டச் செயலாளர்கள் கோ.தளபதி, மு.மணிமாறன் மற்றும் தமிழரசி எம்.எல்.ஏ., மாவட்ட ஆட்சியர் சங்கீதா உள்பட அமைச்சர்கள், நாடாளுமன்ற – சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு அதிகாரிகள், கழக நிர்வாகிகள் உள்ளனர்.

தைத்திருநாளையொட்டி மதுரை மாவட்டத்தில் புகழ் பெற்ற ஜல்லிக்கட்டு போட்டிகள் நடைபெறுவது வழக்கம். காணும் பொங்கலான நேற்று உலகப் புகழ்பெற்ற அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு தொடங்கியது.

சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட தி.மு.க. இளைஞரணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஜல்லிக்கட்டை தொடங்கி வைத்தார்.

முன்னதாக வாடிவாசலில் இருந்து ஒவ்வொரு காளையாக மைதானத்திற்குள் அவிழ்த்து விடப்பட்ட காளைகளை அடக்க வீரர்கள் தீரத்துடன் தழுவினர்.

**அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!**

தி.மு.க. இளைஞரணிச் செயலாளரும், அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், சங்க காலம் முதல் இந்தக் காலம் வரை ஏறு தழுவுதல் நம் பண்பாட்டின் அடையாளமாகத் திகழ்வதாகத் தெரிவித்துள்ளார்.

உலகப்புகழ் பெற்ற மதுரை அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டுப் போட்டியை உறுதிமொழி வாசித்து கொடியசைத்து தொடங்கி வைத்தோம் எனக் குறிப்பிட்டுள்ள அமைச்சர், வாடிவாசலில் இருந்து துள்ளிக் கொண்டு சீறிப்பாயும் காளைகள் தீரமிகு வீரர்கள் என ஆர்ப்பரித்த அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு நமக்கு உற்சாகத்தையும், மகிழ்ச்சியையும் தந்ததாகத் தெரிவித்துள்ளார்.

அரசு வகுத்த அத்தனை விதிமுறைகளையும் முறையாக பின்பற்றி ஜல்லிக்கட்டுப் போட்டியை நடத்தி வரும் ஏற்பாட்டாளர்கள் அனைவருக்கும் பாராட்டுகளை தெரிவித்துக் கொண்டுள்ள அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நம் வீர விளையாட்டான ஜல்லிக்கட்டைப் போற்றுவோம், பாதுகாப்போம் எனக் கேட்டுக் கொண்டுள்ளார்.

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 18-01-2024

# குறளும் குதர்க்கவாதிகளும் - 1

வந்த வேலையைத் தவிர, மற்ற எல்லா வேலைகளையும் பார்க்கிறார் ஆளுநர் ஆர்.என்.ரவி. அவரைச் சுற்றி வளைத்துக் கொண்டு குளிர் காய்ந்து கொண்டிருக்கிறது ஆரியக் கும்பல். அந்தக் கும்பலிடம் சிக்கி இருப்பதால் வலிய வந்து வாயைக் கொடுத்து உடம்பைப் புண்ணாக்கிக் கொள்கிறார் ஆளுநர்.

திருவள்ளுவர் தினத்தன்று வள்ளுவருக்கு காவி உடை அணிவித்து வாழ்த்துச் சொல்லி இருக்கிறார் ஆளுநர். அவர் வாழ்த்தை யார் கேட்டது? வாழ்த்துச் சொல்லாமலேயே இருந்திருக்கலாம்.

**ஆன்மிக பூமியாம் தமிழ்நாடு. இவர் வந்துதான் அகழ்வாராய்ச்சி செய்து கண்டுபிடித்திருக்கிறார். பாரதிய சனாதன பாரம்பரியத்தின் பிரசாரமான துறவியாம் திருவள்ளுவர். எப்போது வந்தது பாரதிய என்ற பெயர்? இவர் சொல்லும் சனாதனச் சக்கையின் பொருள் என்ன? திருச்சி கல்யாணராமன் சொல்லிக் கொண்டு இருக்கிறாரே அதுதானே? திரிபுவாத உளறல்களுக்கு அளவு இல்லையா?**

**வள்ளுவர் வாழ்ந்த காலத்தில் பாரதம் உண்டா? பாரதியம் உண்டா? சனாதனச் சழக்குகளை அகற்ற வந்தவரே வள்ளுவர் தானே?**

சில மாதங்களுக்கு முன்பும் திருக்குறளைப் பற்றி இப்படித்தான் வாய்க்கு வந்ததை பேசினார் ஆளுநர்.

“திருக்குறளை ஜி.யு.போப்பின் ஆங்கில மொழி பெயர்ப்பில் படித்தபோது அதிர்ச்சியாக இருந்தது. திருவள்ளுவர் குறிப்பிட்ட தமிழர்களின் ஆதிபகவன் என்கிற ஆன்மிக ஞானத்தை சின்னா பின்னமாக்கும் காலனித்துவ நோக்கத்துடன் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளது. திருக்குறளில் இருந்த ஆன்மிகத்தை முற்றிலுமாக அகற்றி மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஜி.யு.போப் குறிப்பிட்ட மதத்தின் பிரச்சாரகர் மட்டுமல்ல, பிரிட்டன் நாடாளுமன்றத்தின் திட்டங்களுக்காக அனுப்பி வைக்கப்பட்டவர். அதே சமயத்தில் தமிழ் அறிஞர்களால் மொழிபெயர்க்கப்பட்ட திருக்குறளைப் படிக்கும் போது மகிழ்ச்சியுற்றேன்” - என்று பேசினார். இவருக்கு ஜி.யு.போப்பை கிறித்துவராகச் சொல்ல வேண்டும். அதைச் சொல்லி கொச்சைப்படுத்த வேண்டும். அந்த நோக்கத்துக்கு திருக்குறளை சிதைத்தார்.

ஜி.யு.போப் சிதைத்து விட்டாராம். இவர் தமிழ் அறிஞர்களின் மொழி பெயர்ப்பைப் படித்தாராம். யார் மொழிபெயர்த்ததைப் படித்தார் என்பதைச் சொல்லி இருந்தால் இரண்டுக்குமான வேறுபாடு என்ன என்பதைப் பார்க்கலாம். அதைச் சொல்லவில்லை ஆளுநர்.

உலகப் பொதுமறையாக ஆகிவிட்ட திருக்குறள் உலகின் 200க்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு விட்டது. இதனைக் கபளீகரம் செய்யத் துடிக்கிறது ஆரியக் கும்பல்.

**திருக்குறளை ஞானத்தின் ஊற்று, நித்திய ஆன்மிகம், ஞானத்தின் காவியம், தர்மத்தின் கண், ஆதிபகவன், பக்தி, ரிக்வேதம், உலகத்தை படைத்தவன் ஆதிபகவன் - என்று சொல்வதன் மூலமாக சனாதனக் கூட்டுக்குள் அடைக்கப் பார்க்கிறார்கள். இவர்களுக்குள் அடக்க முடியாதவர் திருவள்ளுவர். அது மட்டுமல்ல, சனாதனத்துக்கு எதிராகவே தனது நூலை உருவாக்கினார் திருவள்ளுவர்.**

**“திருக்குறள் என்பது சமயத்திற்காகத் தோன்றிய நூலன்று. பிற்காலத்தவர்கள் வடமொழி நான்மறையோடு திருக்குறள் ஒத்தது என்பர். இல்லை, இல்லவே இல்லை” என்றவர் தவத்திரு குன்றக்குடி அடிகளார். அத்தகைய வள்ளுவரைத் தான் பாரதிய சனாதனி என்கிறார் ஆர்.என்.ரவி.**

திருக்குறளை இலக்கியமாக மட்டுமல்லாமல், இயக்கமாகப் பரப்பி போற்றிய மாநிலம் தமிழ்நாடு. தமிழ் அமைப்புகள், குறளை நெறியாகக் கடைப்பிடிக்கத் தொடங்கினார்கள். திருவள்ளுவரை வழிகாட்டியாகப் போற்றினார்கள். அப்போது திராவிட இயக்கம் தான் திருவள்ளுவருக்கு அரசியல், சமூக முகம் கொடுத்தது. திருக்குறள் மாநாடுகளை நடத்தியது. திருக்குறளை மலிவு விலைப் பதிப்பாகப் போட்டு விற்பனை செய்தார் தந்தை பெரியார்.

“ஆரியரல்லாத இந்நாட்டு மக்கள் அனைவருக்கும் சிறப்பாக இந்நாட்டுப் பழங்குடி மக்களான திராவிடர்கள் அனைவருக்கும் வள்ளுவர் அருளிய திருக்குறள் ஒரு பெரிய செல்வமேயாகும். நமது பெருமைக்கும், நெறிக்கும் (மதத்துக்கும்), நாகரிகத்திற்கும் வாழ்க்கை முறைக்கும் எடுத்துக் காட்டாக அதில் பல சங்கதிகளை நாம் காணலாம். திருக்குறளின் பேரால் நம் பெருமையை திராவிடரல்லாத மக்களுக்கு உணரச் செய்ய முடிகிறது. நமது சரித்திரத்திற்கும் நாகரிகத்திற்கும் பல இலக்கியங்களிலிருந்தும் பல காரியங்களிலிருந்தும் ஆதாரங்கள் எடுத்துக்காட்ட முடியுமாயினும் அவை பெரும்பாலும் பண்டிதர்களுக்குத் தான் புரியும். அவர்களுக்குத் தான் பயன்படும். ஆனால் திருக்குறள் ஒன்றுதான் பாமர மக்களும் புரிந்து கொள்ளும் வகையில் எப்படிப்பட்ட அறிவாளியும் ஏற்கும் தன்மைக்கு ஏற்ற ஆதாரமாய் அமைந்திருக்கிறது” என்று 1948 ஆம் ஆண்டு பேசியவர் தந்தை பெரியார்.

**தெய்வீகத்தன்மையை வள்ளுவருக்கு தந்துவிடக் கூடாது, திருக்குறளை உண்டாக்கியவரின் உண்மைப் பெயர் மறைக்கப்பட்டுவிட்டது, திருக்குறள் திராவிடநூல், இதனை நன்றாக மனதில் பதிய வையுங்கள், ஆரியக் கொள்கைகளை மடியச் செய்ய எழுதப்பட்ட நூல் திருக்குறள், புத்தர் செய்த வேலையை திருக்குறள் செய்துள்ளது, திருக்குறளை நான் ஆராய்ச்சி செய்தவனல்ல; ஆனால் பெருமையை உணர்ந்துள்ளவன், என்று பேசிய பெரியார், இதனை பாடத்தில் சேர்க்க வேண்டும் என்றார்.**

திருக்குறளை மூன்றாகப் பிரித்து எளிதில் புரியும் குறளை கீழ் வகுப்புகளுக்கும், கடினமானதை நடுத்தர வகுப்புக்கும், அதன்பிறகு உள்ளதை மேல் வகுப்புக்கும் வைத்தால் பள்ளிகளால் மதப்படிப்போ, ஒழுங்குப்படிப்போ தனியாக வேண்டுவதில்லை என்றார். மாணவர்களின் பரீட்சைக்குள் திருக்குறளை உணரும்படி செய்துவிட்டால் எவ்வளவோ நன்மை என்றார். திராவிடர் கழக மாநாடுகளில் திருவள்ளுவர் படத்தை திறந்து வைத்தார்.

★ பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய் தொழில் வேற்றுமை யான்.

★ இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக இவ்வுலகியற்றி யான்.

★ மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்.

★ குடிசெய் வார்க்கில்லை பருவம் படிசெய்து
மானங் கருதக் கெடும்.

★ தெய்வத்தால் ஆகாது எனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்.

★ இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்.

★ எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு.

★ எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு.

- ஆகிய குறள்களை அதிகம் மேற்கோள் காட்டினார் பெரியார்.

**- தொடரும்**

---

### சென்னை மாநகரில் இயக்குவதற்காக

## 100 மின்சார குளிர்சாதன பேருந்துகள் வாங்க முடிவு!

### தமிழ்நாடு அரசு டெண்டர் வெளியீடு!

*சென்னை, ஜன. 18-* தமிழ்நாட்டில் மின்சார பேருந்துகளின் சேவையை கொண்டுவர அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதன்படி முதல்கட்டமாக (Gfx in) ஏ.சி உள்ளிட்ட அனைத்து வசதிகளுடன் கூடிய 100 மின்சார பேருந்துகளை வாங்க தமிழ்நாடு அரசு டெண்டர் வெளியிட்டுள்ளது.

12 மீட்டர் நீளம் கொண்ட தாழ்தளத்துடனும், ஏசி வசதியுடன் கூடிய மின்சார பேருந்துகளை வாங்கவும் மற்றும் சார்ஜிங் தீர்வுக்கான வழங்கல், டிப்போ மேம்பாட்டுப் பணிகளுடன் செயல்பாடு மற்றும் பராமரிப்புக்காக அரசு போக்குவரத்து துறையால் இந்த டெண்டர் விடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டிலோ அல்லது இந்தியாவின் மற்ற பகுதிகளிலோ, வெளிநாட்டிலோ உற்பத்தி வசதிகள் மற்றும் தொடர்புடைய திறன்களைக் கொண்ட புகழ்பெற்ற தேசிய மற்றும் சர்வதேச வாகன உற்பத்தி யாளர்கள் இதில் பங்கேற்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான ஆவணத்தை tntenders.gov.in என்ற இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது.



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை 13.1.2024 அன்று முகாம் அலுவலகத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா சந்தித்து, வனவிலங்குகளால் தாக்கப்பட்டு உயிரிழப்பவர்களின் குடும்பத்தினருக்கு தமிழ்நாடு அரசால் அளிக்கப்படும் 5 இலட்சம் ரூபாய் நிவாரண நிதியினை, தனது கோரிக்கையை ஏற்று 10 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்க ஆணையிட்டமைக்காக நன்றி தெரிவித்தும், “முத்துகள் மூன்று” என்ற தலைப்பில் தொகுக்கப்பட்ட தனது நூலினையும் வழங்கினார்.

---

### சாலை விதிகளை முழுமையாகக் கடைப்பிடித்து

## “விபத்தில்லா தமிழ்நாடு” என்ற இலக்கினை அடைவோம்!

### “சாலைப் பாதுகாப்பு மாதம்” - முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

**சென்னை, ஜன.18- “சாலை விதிகளை முழுமையாகக் கடைப்பிடித்து விபத்தில்லா தமிழ்நாடு என்ற இலக்கினை அடைவோம்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ‘சாலைப் பாதுகாப்பு மாதம்’ குறித்து வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.**

இதுகுறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சாலைப் பாதுகாப்பு மாதம் - வாழ்த்துச் செய்தி வருமாறு:-

சாலை விபத்துகளால் ஏற்படும் கொடுங்காயங்கள் மற்றும் இறப்புகளைத் தடுக்கும் பொருட்டு, சாலைகளில் பொது மக்களின் பாதுகாப்பு மிகமிக அவசியமானதாகிறது. சாலையை உபயோகிக்கும் பாதசாரிகள் மற்றும் வாகன ஓட்டுநர்களின் பாதுகாப்பினை கருத்தில் கொண்டு, சாலைப் பாதுகாப்பு விதிமுறைகளைக் கடைபிடிப்பது நம் அனைவரின் கடமையாகும்.

நமது நாட்டில், சாலைப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை பொதுமக்களிடையே ஏற்படுத்தும் பொருட்டு, இந்த ஆண்டு சனவரி 15 முதல் பிப்ரவரி 14 வரை “தேசிய சாலைப் பாதுகாப்பு மாதம்” அனுசரிக்கப்படுகிறது. சாலையைப் பயன்படுத்தும் ஒவ்வொருவரும் விபத்தில்லாப் பயணத்தை உறுதி செய்வது தேசிய சாலைப் பாதுகாப்பு மாத விழாவின் முக்கிய நோக்கமாகும்.

#### விபத்தில்லா தமிழ்நாடு!

தமிழ்நாடு அரசின் “விபத்தில்லா தமிழ்நாடு” என்ற இலக்கினை அடையும் பொருட்டு, தமிழ்நாடு அரசு பல்வேறு முன்முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக, 2023-2024ஆம் ஆண்டிற்கு, சாலைப் பாதுகாப்பிற்காக அரசு 135 கோடியே 84 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இந்த நிதியானது, குழந்தைகள் மற்றும் இளைஞர்களிடையே சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன், அடிக்கடி விபத்து நிகழும் பகுதிகளைக் (Accident Hot Spots) கண்டறிந்து மேம்படுத்தவும், நவீன சமிக்ஞை விளக்குகள், சாலைக் கட்டமைப்புகள் மற்றும் சாலைத் தடுப்பான்களை நிறுவுவதற்காகவும் செலவிடப்பட்டு வருகிறது.

சாலைப்பாதுகாப்பு விதிகளைப் பின்பற்றத் தவறுவதால் வாகன விபத்துகள் ஏற்படுகின்றன. தனி மனித நடத்தை, ஓட்டுநரின் உளவியல் நிலை, பெருகி வரும் வாகனங்களின் எண்ணிக்கை, சாலையின் அமைப்பு, சுற்றுப்புறச்சூழல் போன்றவைகளே சாலை விபத்துகளுக்கான முக்கிய காரணிகள் என பல்வேறு ஆய்வுகள் உறுதிப்படுத்தியுள்ளன. மேலும், தற்போதைய மற்றும் வருங்கால சாலை உபயோகிப்பவர்களிடையே பாதுகாப்பான சாலைப் பயனாளர் நடத்தையை ஊக்குவிப்பதற்காக சாலைப் பயனாளர்களுக்கு சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வை வழங்குவது அரசின் முக்கிய நோக்கமாகும்.

#### மாணவர்களுக்கு விழிப்புணர்வு!

தமிழ்நாட்டில் முதலமைச்சர் அவர்களின் “இன்னுயிர் காப்போம் : நம்மைக் காக்கும் 48” என்ற சீர்மிகு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதோடு, பாதுகாப்பான பயணத்திற்கு ஏற்றவகையில், சாலை வசதிகளும் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், சாலை விபத்தில் காயமடைந்தவர்களுக்கு விரைந்து சிகிச்சை அளிக்கும்பொருட்டு, மாநில மற்றும் தேசிய நெடுஞ்சாலைகளில் உடனடி விபத்து சிகிச்சை மையங்கள் ஏற்படுத்தப்பட்டு இயங்கி வருகின்றன. சாலைப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வினை பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களிடையே ஏற்படுத்தும் பொருட்டு சாலைப் பாதுகாப்பு மன்றங்கள் அனைத்து அரசு மற்றும் அரசு சாரா பள்ளிகளில் உருவாக்கப்பட்டு செயல்பாட்டில் இருந்து வருகின்றன.

இந்த சாலைப்பாதுகாப்பு மாதத்தில், அரசானது வாகனத்தை இயக்கிவரும் ஓட்டுநர்களுக்கு சாலைப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துதல், பாதசாரிகள் சாலையை கடப்பதற்கு நடை மேம்பாலங்கள் மற்றும் சுரங்க நடைபாதைகள் ஆகியவைகளை மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்துதல் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகளை தமிழ்நாடு முழுவதும் நடத்த திட்டமிட்டுள்ளது.

உயிர் வாழ்வதற்கான மற்ற அடிப்படைத் திறன்களை போல சாலைப் பாதுகாப்புக் கல்வியும் இன்றியமையாதது என்பதை உணர்ந்து, சாலை விதிகளை முழுமையாகக் கடைபிடித்து விபத்தில்லா தமிழ்நாடு என்ற இலக்கினை அடைய நாம் அனைவரும் பொறுப்புடன் செயல்படுவோம்.

சாலை விதிகளை மதித்தால், விபத்தில்லா பயணம் சாத்தியமே !!

விதிகளை மதிப்போம்! வேதனைகளைத் தவிர்ப்போம் !!

சாலைப் பாதுகாப்பு
நம் உயிர் பாதுகாப்பு!

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.



குறள் நெறி நம் வழி – குறள் வழியே நம் நெறி!

# திருவள்ளுவரை யாரும் கறைபடுத்த முடியாது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

**சென்னை, ஜன. 18 -**

**குறள் நெறி நம் வழி என்றும் குறள் வழியே நம் நெறி என்றும் குறிப்பிட்டு, தமது சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாட்டில் வள்ளுவரை யாரும் கறைபடுத்த முடியாது என்றும் தெரிவித்துள்ளார்.**



அய்யன் திருவள்ளுவர் திருநாளை முன்னிட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு :-

தமிழினத்தில் பிறந்து அமிழ் தமிழில் அறம் உரைத்து உலகம் முழுமைக்குமான நெறிகள் சொன்ன வான்புகழ் வள்ளுவர் நாள் வாழ்த்துகள்!

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற சமூகநீதிக் கோட்பாட்டையும் முயற்சி மட்டுமே வெற்றியைத் தரும் என்ற தன்னம்பிக்கை ஊக்கத்தையும் அறன் எனப் பட்டதே இல்வாழ்க்கை என்ற கருத்தியலையும் வழிகாட்டியவர் வள்ளுவர்.

133 அடியில் சிலையும் தலைநகரில் கோட்டமும் அமைத்துப் போற்றும் குறளோவியத் தமிழ்நாட்டில் வள்ளுவரை யாரும் கறைப்படுத்த முடியாது.

குறள் நெறி நம் வழி!

குறள் வழியே நம் நெறி!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சபரீசனின் பெரியப்பா தியாகராஜன் அவர்கள் உடல்நலக் குறைவால் காலமானதையொட்டி 16.01.2024 அன்று சென்னை, கொட்டிவாக்கத்திலுள்ள அவரது இல்லத்திற்கு நேரில் சென்று, அவரது உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார். உடன் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், சட்டமன்ற உறுப்பினர் அரவிந்த் ரமேஷ் ஆகியோர் உள்ளனர்.

## இந்தியாவின் ஆன்மாவுக்கு எதிரானது; அரசியல் சாசன அறத்துக்கு மாறானது!

# அயோத்தி விழா, அரசியல் விழாதான்!

## கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. அறிக்கை!

**சென்னை, ஜன. 18 -**

**“அயோத்தி விழா, அரசியல் விழா தான்” என்று கழகப் பொருளாளரும் நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.**

இது குறித்து கழகப் பொருளாளரும் தி.மு.க. நாடாளுமன்றக் குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

2014ஆம் ஆண்டு ஒன்றிய அளவில் ஆட்சிக்கு வந்த பாரதீய ஜனதா கட்சி, நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னதாகக் கொடுத்த எந்த வாக்குறுதியையும் இதுவரை நிறைவேற்றவில்லை. வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லையே என்ற கூச்சமும் அந்தக் கட்சிக்கு இல்லை. இதை மறைப்பதற்கும் மக்கள் கவனத்தைத் திசைதிருப்பவும் அயோத்தியில் இராமர் கோயில் கட்டியதைத் தனது சாதனையாகக் காட்டி, தங்களது தோல்வியை மொத்தமாக மறைக்க நினைக்கிறார்கள்.

**எந்த வாக்குறுதியும் நிறைவேற்றப்படவில்லை!**

2014ஆம் ஆண்டு ஆட்சிக்கு வருவதற்கு முன்னால் பா.ஜ.க. தேர்தல் வாக்குறுதிகளை வாரி வழங்கியது. அதில் எந்த வாக்குறுதியை இந்தப் பத்தாண்டு காலத்தில் நிறைவேற்றி இருக்கிறார்கள்?

உழவர்களின் வருமானத்தை இரண்டு மடங்கு ஆக்குவோம், ஆண்டுக்கு இரண்டு கோடி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தருவோம், நாடு முழுவதும் இருக்கும் நதிகளை இணைப்போம், 2022ஆம் ஆண்டுக்குள் இந்தியாவில் அனைத்துக் குடும்பத்துக்கும் சொந்த வீடு கட்டித் தருவோம், இந்தியா 5 டிரில்லியன் டாலர் பொருளாதார நாடாக மாறும், வெளிநாட்டில் பதுக்கி வைக்கப்பட்ட கருப்புப் பணத்தை முழுமையாக மீட்போம், மீட்கப்பட்ட கருப்புப்பணத்தை இந்திய மக்கள் அனைவருக்கும் 15 லட்சமாகத் தருவோம் என்றெல்லாம் நீட்டி முழக்கப்பட்ட எந்த வாக்குறுதியும் நிறைவேற்றப்படவில்லை.

தமிழ்நாட்டுக்குப் பல்வேறு வாக்குறுதிகளைக் கொடுத்தார்களே... அதில் ஏதாவது செய்தார்களா என்றால், அதுவும் இல்லை!

நாட்டு மக்களுக்கு பா.ஜ.க. கொடுத்ததெல்லாம் பெட்ரோல் விலை உயர்வு! டீசல் விலை உயர்வு! சமையல் எரிவாயு விலை உயர்வு! இந்திய ரூபாயின் மதிப்பு வரலாறு காணாத வீழ்ச்சி!



நடுத்தரச் சூழலில் வாழும் மக்களையும், அனைத்துத் தரப்பு மக்களையும் நெருக்கடிக்கு உள்ளாக்கியிருக்கிறார்கள்.

ஜி.எஸ்.டி. மூலமாக மாநில நிதி வளங்களைச் சுரண்டி நெருக்கடிக்கு உள்ளாக்கினார்கள்.

மழை, புயல் காலங்களில் தர வேண்டிய நிவாரணங்களைக் கூடத் தராமல் வஞ்சிக்கும் அநீதி நடக்கிறது.

இப்படி அனைத்து வகையிலும் மக்களைப் பத்தாண்டு காலமாக வேட்டையாடி வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசு, தேர்தல் நெருங்கி வரும் நேரத்தில், இன்னும் முழுமையாகக் கட்டிமுடிக்காத அயோத்தி இராமர் கோயிலைக் கட்டியிருக்கிறோம் என்று சொல்லி வாண வேடிக்கை காட்ட முயல்கிறது.

**தி.மு.க. அரசியல் குளிர் காய்ந்தது இல்லை!**

பேரறிஞர் அண்ணா அவர்களின் காலந்தொட்டு, “ஒன்றே குலம், ஒருவனே தேவன்” என்ற கோட்பாட்டைப் பின்பற்றி வரும் திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய அரசியலமைப்புச் சட்டம் வலியுறுத்திக் கூறும் மதச்சார்பின்மை என்ற கோட்பாட்டில் ஆழமான பிடிப்பு கொண்ட இயக்கம். வெறுப்பரசியலைப் புறந்தள்ளி சகோதரத்துவம் ததும்பும் நல்லிணக்கத்தை நாடும் தி.மு.கழகம், ஒருபோதும் அரசியலை ஆன்மிகத்திலும் பக்தியில் அரசியலையும் புகுத்தி அரசியல் குளிர் காய்ந்தது இல்லை.

**பல்லாயிரக்கணக்கான ஆலயங்களில் திருப்பணிகள்!**

கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான நல்லாட்சியில் பல்லாயிரக் கணக்கான ஆலயங்களில் திருப்பணிகள், ஆயிரம் கோயில்களுக்குக் குடமுழுக்குகள் செய்தும், இலட்சோப லட்சம் மக்கள் திரளும் திருவிழாக்களில் இறையன்பர்களுக்குத் தக்க வசதிகளைச் செய்தும், 5381 கோடி ரூபாய் மதிப்புள்ள கோயில் சொத்துகளை மீட்டும் எடுத்துள்ள நடவடிக்கைகளைப் ஆன்மீகத் தரப்பு மக்களும் போற்றி வருகின்றனர். இவற்றையெல்லாம் தேர்தல் மேடைகளில் பேசி ஓட்டரசியல் ஆதாயத்தை நாங்கள் நாடியதில்லை.

**நாட்டின் எதிர்காலத்துக்கு நல்லதல்ல!**

இறை நம்பிக்கை ஒருவரது ஆன்மத் தேடல்; தனிப்பட்ட உரிமை. அரசியல் அணி திரட்டவும், வாக்கு வங்கிக்காகவும் பக்தியை மூலதனமாக வைத்து, மக்களின் நம்பிக்கையில் அரசியல் செய்வது இந்தியாவின் ஆன்மாவுக்கு எதிரானது; அரசியல்சாசன அறத்துக்கு மாறானது; நாட்டின் எதிர்காலத்துக்கும் நல்லது அல்ல!

இறை நம்பிக்கை என்பது ஒவ்வொரு மனிதரின் விருப்பமும் உரிமையும் ஆகும். ஒருவரது பக்தியை அரசியலுக்கான முதலீடாக மாற்றுவது ஜனநாயகத்துக்கு எதிரானது மட்டுமல்ல, ஆன்மீக அறங்களுக்கே எதிரானது ஆகும்.

கோயில் கட்டுவதையும், திறப்பதையும் தனது கட்சியின் சாதனையாகக் காட்டி மக்களை ஏமாற்ற ஒன்றிய பா.ஜ.க. அரசும், பிரதமர் நரேந்திர மோடியும் நினைப்பது ஏற்கத்தக்கது அல்ல. ஆன்மீகத் திருவிழாவை பா.ஜ.க.வின் அரசியல் திருவிழாவாக மாற்ற நினைப்பதை அறிவார்ந்த இந்திய மக்கள் புறந்தள்ளுவார்கள்.

**‘மத ராஷ்டிரா’வுக்கான கால்கோள் விழா!**

பாரதீய ஜனதா கட்சி தனது ‘மத ராஷ்டிரா’வுக்கான கால்கோள் விழாவைப் போல ஒரு கோயில் விழாவைப் பயன்படுத்துவது கண்டிக்கத்தக்கது. வேற்றுமையில் ஒற்றுமை கண்டு காலம் காலமாக வாழக்கூடிய இந்திய நாட்டின் பன்முகத்தன்மையைச் சிதைக்கும் செயலை பா.ஜ.க. தொடர்வதும் நல்லதல்ல!

மக்களுக்கு நன்மை செய்வதன் மூலமாக அல்லாமல், மக்களை ஏமாற்றுவதன் மூலமாக வெல்ல முடியுமா என்று பார்க்கிறது பாரதீய ஜனதா கட்சி. இதற்கு இந்திய நாட்டு மக்களே தக்க பாடம் கொடுப்பார்கள் என்பது உறுதி.

இவ்வாறு கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. அவர்கள் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

## மாநிலங்களின் புத்தாக்கத் தொழில் தரவரிசை!

# சிறந்த செயல்திறன் பட்டியலில் தமிழ்நாடு!

## ‘தி இந்து’ நாளேட்டில் செய்தி!

**சென்னை, ஜன. 18 -**

**மாநிலங்களின் ஸ்டார்ட்அப் தரவரிசை 2022 இல் தமிழ்நாடு ‘சிறந்த செயல்திறன்’ பிரிவில் உள்ளது என்று தி இந்து ஆங்கில நாளேட்டில் செய்தி வெளியாகி உள்ளது.**

அதன் விபரம் வருமாறு:-

புதுடெல்லியில் நடந்த நிகழ்ச்சியில் தரவரிசை வெளியிடப்பட்டது. இந்தப் பிரிவின் கீழ் தரவரிசைப்படுத்தப்பட்ட ஐந்து மாநிலங்களில் தமிழ்நாடும் இருந்தது. பிப்ரவரி 2018 இல் தொடங்கப்பட்ட இந்த தரவரிசை, மாநிலக் கொள்கை தலையீட்டின் பார்வையில் இந்திய ஸ்டார்ட்அப் நிலப்பரப்பை மதிப்பிடுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது மற்றும் வளர்ச்சியை விரைவுபடுத்தும் நடைமுறைகளை அடையாளம் காட்டுகிறது.

செவ்வாயன்று புதுடெல்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் வெளியிடப்பட்ட 2022 ஆம் ஆண்டுக்கான ஸ்டார்ட்அப் தரவரிசையில் ‘சிறந்த செயல்திறன்’ பிரிவில் இடம் பெற்றுள்ள ஐந்து மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று.

குஜராத், கர்நாடகா, கேரளா மற்றும் இமாச்சலப் பிரதேசம் ஆகியவை இந்த சிறந்த பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட மற்ற மாநிலங்கள். சிறந்த செயல்திறன் கொண்ட மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் மாதிரி ஸ்டார்ட்அப் சுற்றுச்சூழல் அமைப்புகளுடன் மற்றவர்களுக்கு ஒரு அளவுகோலை அமைக்கின்றன. முதல் இரண்டு பதிப்புகளில், ‘வளர்ந்து வரும் சுற்றுச்சூழல் அமைப்பு’ என்ற பிரிவில் தமிழ்நாடு மிகக் குறைந்த பிரிவில் இடம் பெற்றது. இது 2021 ஆம் ஆண்டு தரவரிசையில் ‘தலைவராக’ அங்கீகரிக்கப்பட்டது, இது மூன்றாம் பதிப்பின் போது இருந்தது.

தமிழ்நாடு ஸ்டார்ட்அப் மற்றும் இன்னோவேஷன் மிஷன் (ஸ்டார்ட்அப்-டிஎன்) படி, “ஏழு சீர்திருத்தப் பகுதிகளில் மூன்றில் தமிழ்நாடு அதிகபட்சமாக 100வது சதவிகித மதிப்பெண்களைப் பெற்றது: நிறுவன ஆதரவு, நிதி ஆதரவு மற்றும் செயல்படுத்துபவர்களின் திறன் மேம்பாடு. சீர்திருத்தப் பகுதியில் 100வது சதவீதத்தைப் பெறுவது என்பது மற்ற மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களை விட தமிழ்நாடு மாநிலம் அதிக மதிப்பெண் பெற்றுள்ளது என்பதைக் குறிக்கிறது.



Tamil Nadu placed under ‘Best Performer’ category in States’ Startup Ranking 2022

The ranking was released at an event in Delhi. Tamil Nadu was among the five States ranked under this category. Launched in February 2018, the ranking aims at evaluating the Indian start-up landscape through the eyes of State policy intervention and identifies practices that accelerate growth

இன்குபேஷன் மற்றும் மென்டர்ஷிப் ஆதரவில் தமிழ்நாடு 94வது சதவீதத்தையும், புதுமை மற்றும் தொழில்முனைவோரை வளர்ப்பதில் 79வது இடத்தையும், நிலையான எதிர்காலத்திற்கான வரைபடத்தில் 75வது இடத்தையும் பெற்றுள்ளது. ஸ்டார்ட் அப் இன் முயற்சிகளான டான்சீட் நிதியை நிறுவுதல், தமிழ்நாடு ஆதிதிராவிட பழங்குடியினரின் ஸ்டார்ட்அப் ஃபண்ட் மற்றும் ஸ்டார்ட் அப்களை ஆதரிக்கும் புதுமை வவுச்சர் திட்டம் ஆகியவை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ளன. பெண்களால் நடத்தப்படும் ஸ்டார்ட் அப்களுக்கான சிறப்பு விதை மானியங்களுக்காகவும், கிராமப்புற மற்றும் பசுமை தொழில்நுட்பத் துறைகளில் கவனம் செலுத்துவதற்காகவும் மாநிலம் அங்கீகரிக்கப்பட்டது.

மாநிலங்களின் ஸ்டார்ட்அப் தரவரிசை கட்டமைப்பு (SRF) என்பது தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தகத்தை மேம்படுத்துவதற்கான துறையால் உருவாக்கப்பட்ட மற்றும் வெளியிடப்பட்ட ஒரு குறிப்பிட்ட கால திறன் மேம்பாட்டு பயிற்சி ஆகும், இது இந்தியாவின் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களை ஸ்டார்ட்அப் வளர்ச்சிக்கு உகந்த சூழலை உருவாக்குவதற்கான அவர்களின் முயற்சிகளின் அடிப்படையில் மதிப்பீடு செய்கிறது. . நாட்டில் ஒரு வலுவான ஸ்டார்ட்அப் சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்குவதற்கான பார்வையை அடைய பிப்ரவரி 2018 இல் மாநிலங்களின் ஸ்டார்ட்அப் தரவரிசை தொடங்கப்பட்டது. இது அரசின் கொள்கை தலையீட்டின் மூலம் இந்திய ஸ்டார்ட்அப் நிலப்பரப்பை மதிப்பிடுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது, மேலும் சுற்றுச்சூழல் அமைப்பின் வளர்ச்சி மற்றும் வளர்ச்சியை துரிதப்படுத்தும் நடைமுறைகளை அடையாளம் காட்டுகிறது. தமிழகத்தைச் சேர்ந்த இரண்டு ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் விருதுகளைப் பெற்றுள்ளன. கோயம்புத்தூரைச் சேர்ந்த கிரீன்விரோ குளோபல் பிரைவேட் லிமிடெட், 2023 ஆம் ஆண்டுக்கான தேசிய ஸ்டார்ட்அப் விருதுகளை ‘நிலைத்தன்மை சாம்பியன்’ பிரிவின் கீழ் பெற்றது. இந்த நிறுவனம் வேளாண் கழிவுகளை ‘பசுமை கரி ப்ரிக்வெட்டுகளாக’ மாற்ற புதுமையான மதிப்பு செயலாக்க நுட்பத்தைக் கொண்டுள்ளது. மரங்களை வெட்டுவதன் மூலம் உற்பத்தி செய்யப்படும் மர கரிக்கு மாற்றாக இது பயன்படுத்தப்படுகிறது.

இதுபற்றி அதன் நிறுவனரும் நிர்வாக இயக்குனருமான முருகானந்தம் வி.என், கூறியதாவது: “நாங்கள் 2019 இல் தொடங்கினோம். தற்போது, எங்கள் நெட்வொர்க்கில் கோயம்புத்தூர் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து 1,000 விவசாயிகள் உள்ளனர். நாங்கள் அமெரிக்கா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, துருக்கி மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறோம். இந்த ஆண்டு, நாங்கள் பல நாடுகளுக்கு செல்ல விரும்புகிறோம். திருப்பூர், ஈரோடு மற்றும் அருகிலுள்ள இடங்களிலும் புதிய வசதியை ஏற்படுத்த உள்ளோம். இரண்டாவது ஸ்டார்ட்அப், அட்சுயா டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட், இந்த ஆண்டின் ஜெனிசிஸ் இன்னோவேட்டர்ஸ் விருதைப் பெற்றது.

மாநிலங்களின் ஸ்டார்ட்அப் தரவரிசைப் பயிற்சியின் நான்காவது பதிப்பில், பங்கேற்கும் 28 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் 356 மாவட்டங்களில் 9,000க்கும் மேற்பட்ட பெண்கள் தலைமையிலான ஸ்டார்ட் அப்களுக்கு ஆதரவை வழங்குவதாகக் கூறின. 22 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் பெண்கள் தலைமையிலான ஸ்டார்ட்அப்களுக்கான வரையறை மற்றும் சிறப்பு சலுகைகளை உள்ளடக்கிய கொள்கை ஆவணத்தை அறிவித்துள்ளன.

மொத்தம் எட்டு மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் குறிப்பாக பெண்கள் தலைமையிலான ஸ்டார்ட்அப்களுக்கு வழங்கப்படும் ஊக்கத்தொகைகளின் தெளிவான வரையறையுடன் ஒரு கொள்கையை உருவாக்கியுள்ளன.

தொழில்துறை செயலர் வி.அருண் ராய் கூறியதாவது: சென்னைக்கு வெளியே ஸ்டார்ட் அப்களில் கவனம் செலுத்தியது தமிழகத்திற்கு உதவியது. நாங்கள் மண்டல வளர்ச்சியை விரும்பினோம், எனவே ஈரோடு, மதுரை போன்ற இடங்களில் மையங்களைத் தொடங்கினோம். சமூக உள்ளடக்கம் எங்களுக்கு உதவிய மற்றொரு அம்சமாகும். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நிதி உள்ள வேறு எந்த மாநிலமும் இல்லை. இது எங்களை தனித்து நிற்க வைத்தது...”

மாநிலத்தில் 7,000 க்கும் மேற்பட்ட பதிவு செய்யப்பட்ட ஸ்டார்ட் அப்கள் உள்ளன, அவற்றில் 2,250 க்கும் மேற்பட்டவை SRF 2022 இன் கீழ் பரிசீலிக்கப்பட்ட காலத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறு ‘தி இந்து’வில் செய்தி வெளியாகியுள்ளது.



விருதுநகர் தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழா உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு அருப்புக்கோட்டையில் கபடிப் போட்டி நடைபெற்றது. இந்த விழாவில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் மற்றும் நிதி மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு கலந்து கொண்டு வெற்றி பெற்ற கபடி வீரர்களுக்கு பரிசுகள் வழங்கினர். இதில் தெற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ஆர்.ரமேஷ் நிகழ்ச்சியினை ஏற்பாடு செய்திருந்தார்.

### பிரதமர் மோடியை மட்டுமே முன்னிறுத்தும் ராமர் கோயில் திறப்பு விழா!

# இந்தியாவின் எதிர்காலம் இருண்டு கிடக்கிறது!

## தீக்கதிர் நாளேடு தலையங்கத்தில் குற்றச்சாட்டு!

சென்னை, ஜன. 18 -

பிரதமர் மோடியை மட்டுமே முன்னிறுத்தும் ராமர் கோயில் திறப்பு விழா என்றும் இந்தியாவின் எதிர்காலமே இருண்டு கிடக்கிறது. எனவே ஜனநாயக மதச்சார்பின்மை தீபம் ஏற்றுவோம் என்று தீக்கதிர் நாளேடு தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.



தீக்கதிர்
2024 ஜனவரி 17 புதன்கிழமை

ஜனநாயக – மதச்சார்பின்மை தீபம் ஏற்றுவோம்!

அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்ட இடத்தில் கட்டப்பட்டுள்ள ராமர்கோவில் திறப்பு விழா இம்மாதம் 22ஆம்தேதி நடைபெற உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கோவில் கட்டுமானப் பணிகள் முடிவடைதற்கு முன்பே நாடாளுமன்றத் தேர்தலுக்காக அவசர கோலத்தில் திறப்புவிழா தேதி முடிவு செய்யப் பட்டுள்ளது.

பிரதமர் மோடியை மட்டுமே முன்னிறுத்தும் வகையில் இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. ராமஜென்மபூமி அறக்கட்டளை என்ற பெயரில் இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப் பட்டாலும் இதன் பின்னால் இருப்பது முழுக்க முழுக்க ஆர்எஸ்எஸ்-பாஜக பரிவாரமே ஆகும்.

இதுகுறித்து தீக்கதிர் நாளேட்டின் தலையங்கம் வருமாறு:-

அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்ட இடத்தில் கட்டப்பட்டுள்ள ராமர்கோவில் திறப்பு விழா இம்மாதம் 22ஆம்தேதி நடைபெற உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கோவில் கட்டுமானப் பணிகள் முடிவடைதற்கு முன்பே நாடாளுமன்றத் தேர்தலுக்காக அவசர கோலத்தில் திறப்புவிழா தேதி முடிவு செய்யப் பட்டுள்ளது.

பிரதமர் மோடியை மட்டுமே முன்னிறுத்தும் வகையில் இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. ராமஜென்மபூமி அறக்கட்டளை என்ற பெயரில் இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப் பட்டாலும் இதன் பின்னால் இருப்பது முழுக்க முழுக்க ஆர்.எஸ்.எஸ். பா.ஜ.க. பரிவாரமே ஆகும்.

பா.ஜ.க.வினர் வீடு வீடாகச் சென்று அழைப்பிதழுடன் அட்சதை கொடுப்பதோடு திறப்பு விழா அன்று அனைவரும் வீடுகளில் விளக்கேற்ற வேண்டும் என மிரட்டி வருகின்றனர். சிறு பான்மையினரும் கூட விளக்கேற்ற வேண்டும் என பா.ஜ.க.வினர் சமூக ஊடகங்கள் மூலம் தொடர்ந்து அச்சுறுத்தி வருகின்றனர்.

மதம் என்பது ஒருவருடைய தனிப்பட்ட நம்பிக்கை சார்ந்தது. ஏராளமான மதம் சார்ந்த விழாக்கள் நடைபெற்றுக் கொண்டு தான் இருக்கின்றன. அதில் மக்கள் பங்கேற்றுக் கொண்டுதான் இருக்கிறார்கள். ஆனால் அயோத்தியில் நடைபெற இருப்பது ஆன்மீகத்திற்கு எந்த வகையிலும் தொடர் பில்லாத ஒரு அரசியல் நிகழ்ச்சியாகும்.

எனவேதான் இந்தியாவிலேயே முதல் கட்சியாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி இந்த விழாவில் பங்கேற்கப் போவதில்லை என அறிவித்தது. இதைத்தொடர்ந்து காங்கிரஸ் உள்ளிட்ட பல்வேறு கட்சிகள் இத்தகைய அறிவிப்பை வெளியிட்டுள்ளன. இது பாராட்டத்தக்கது.

மதச்சார்பற்ற இந்தியாவை சிதைத்து குறுகிய இந்துத்துவா நாடாக மாற்ற முயலும் பா.ஜ.க. தன்னுடைய தேர்தல் பிரச்சார மேடையாக ராமர் கோவிலை மாற்றமுயல்கிறது. உண்மையான ராம பக்தர்கள் இதை கண்டிக்க முன்வர வேண்டும். இந்து மதத்தை சேர்ந்த மக்கள் இந்த விழா ஓர் அரசியல் விழா என்பதை உணர வேண்டும்.

நரேந்திர மோடி தலைமையிலான பத்தாண்டு கால ஆட்சி என்பது நாட்டை நாசம் செய்து விட்டது. இந்தியாவின் எதிர்காலம் இருண்டு கிடக்கிறது. இந்த ஆட்சி அகற்றப்பட்டால் தான் இந்தியா காப்பாற்றப் படும். இந்த வேளையில் அனைவரும் ஜனநாயக தீபத்தை உயர்த்திப் பிடித்திட வேண்டும். நாடு முழுவதும் மதச்சார்பின்மை எனும் விளக்கை சுடர்விட்டு எரியச் செய்ய வேண்டும். ராமர்கோவிலைக் காட்டி பா.ஜ.க. ஏமாற்று வேலையில் ஈடுபட்டாலும் மக்கள் தங்கள் வாழ்க்கை பிரச்சனைகளின் அடிப்படையிலேயே தேர்தலில் வாக்களிப்பார்கள். அதற்கான பரப்புரை தீவிரப் படுத்தப்பட வேண்டும்.

இவ்வாறு தீக்கதிர் நாளேடு தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

---

### சிவகங்கை தெற்கு ஒன்றியக் கழகம் சார்பில் சமத்துவப் பொங்கல் விழா!

சிவகங்கை. ஜன. 18–

சிவகங்கை தெற்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் அலுவலகமான அறிவாலயம் முன்பாக சமத்துவப் பொங்கல் விழா ஒன்றியக் கழகச் செயலாளர் எம்.ஜெயராமன் தலைமையில் நடைபெற்றது.

பொங்கல் விழாவினை முன்னிட்டு அனை வருக்கும் பொங்கல் மற்றும் கரும்பினை ஒன்றிய செயலாளர் எம்.ஜெயராமன் வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் நிர்வாகிகள் பஞ்ச வர்ணம், முத்துக்குமார், தங்கச்சாமி, சுரேஷ், மகளிர் அணி ராஜேஸ்வரி, மாவட்ட மகளிரணி அமைப்பாளர் திருமதி பவானி கணேசன், மகளிரணி நிர்வாகிகள் மார்கரெட்கமலா, திலகவதி கண்ணன், மாவட்ட ஆதிதிராவிடர் நலக் குழு அமைப்பாளர் சிங்க முத்து,

ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் தங்கச் செல்வம், மாணவரணி விக்னேஷ், மஞ்சுளா, லட்சுமி, சம்பத், அழகு சுந்தரம், மூக்குத்தி பாலா, குமார், பொன்னம்பலம், செந்தில், கணேசன், சிலம்பரசன், முரசொலி மதி, காளிதாஸ், மகுடபதி, சங்கையா, செந்தில், ஐயப்பன், குட்டிசிலம்பு, அழகர்சாமி, உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

---



மதுரை மாநகர் மாவட்டம் 58அ வட்டக் கழகச் செயலாளர் பி.எம்.ராஜா தலைமையில் மா.ஜெயராம், (மாநில தலைமைச் செயற்குழு உறுப்பினர், கவுன்சிலர், மாமன்ற குழுத்தலைவர்) முன்னிலையில் நடைபெற்ற கழகத்தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் படிப்பகத்தை திறந்து வைத்தார். மாவட்டச் செயலாளர் கோ.தளபதி, கழகக் கொடியை பொன்.முத்துராமலிங்கம், வ.வேலுச்சாமி ஏற்றி வைத்தார். நிகழ்வில் சக்கரை பொங்கலை பி.டி.மணிமாறன், மண்டலத் தலைவர் பி.பாண்டிசெல்வி வழங்கினார்கள். உடன் மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக்கழகச் செயலாளர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள், அணி அமைப்பாளர்கள், மகளிரணி நிர்வாகிகள், வட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள் கலந்து கொண்டனர்.

### திருப்பூர் மாவட்டம் தாராபுரம் தெற்கு கிராமம் - அமராவதி ஆற்றில் நீரில் மூழ்கி

# உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

திருப்பூர், ஜன. 18 -

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் தெற்கு கிராமம் - அமராவதி ஆற்றின் நீரில் மூழ்கி உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி வழங்கி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

மதுரை மாவட்டம், ஆலங்குளத்தைச் சேர்ந்த பாக்கியராஜ் (வயது 39) த/பெ.ராமசாமி, சின்ன கருப்பு (வயது 31) த/பெ.இராமலிங்கம் மற்றும் சிறுவன் ஹரி (வயது 16) த/பெ.அய்யனார் ஆகிய மூவரும் சுற்றுலா சென்றுவிட்டு தங்கள் ஊருக்கு திரும்பும் வழியில், திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், தாராபுரம் தெற்கு கிராமம், மதுரை நெடுஞ்சாலை அபூர்வா ஹோட்டல் அருகே உள்ள அமராவதி ஆற்றில் புதிய ஆற்றுப் பாலம் அருகே (16.1.2024) அன்று குளிக்கச் சென்றபோது எதிர்பாராதவித மாக தண்ணீரில் மூழ்கி உயிரிழந் தார்கள் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகவும் வேதனையடைந்தேன்.

இவ்விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

---

### இ.பரந்தாமன், எம்.எல்.ஏ., ஏற்பாடு!

# எழும்பூர் தொகுதியில் பொங்கல் விழா: விளையாட்டுப் போட்டிகள், கோலப் போட்டி!

## பரிசுக் கோப்பைகள், விளையாட்டு வீரர்களுக்கான உடைகள், உபகரணங்கள் வழங்கப்பட்டன!

சென்னை, ஜன.18-

தமிழ்ப் புத்தாண்டு மற்றும் தமிழர் திருநாள் தைப் பொங்கலை முன்னிட்டு, கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் ஏற்பாட்டில், எழும்பூர் தொகுதியில் கால்பந்தாட்டப் போட்டி, கேரம் போட்டி, கோலப் போட்டி ஆகியவை போகிப் பண்டிகையன்று நடைபெற்றன.

எழும்பூர் தொகுதி, 77 வது வார்டு, கே.பி.பார்கில் அமைந்துள்ள செயற்கை புல்தரை கால்பந்தாட்ட விளையாட்டு மைதானத்தில் எழும்பூர் தொகுதியைச் சேர்ந்த 16 அணிகள் பங்கேற்ற கால்பந்தாட்டப் போட்டிகள் நடைபெற்றன.

மாவட்டப் பிரதிநிதியும், முன்னாள் வட்டச் செயலாளருமான கமலகண்ணன், எழும்பூர் தெற்குப் பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் சிலம்பரசன், 108 (அ) வட்ட இளைஞரணி அமைப்பாளர் சதிஷ்குமார், வழக்கறிஞர் தர்மதுரை ஆகியோர் இக்கால் பந்தாட்டப் போட்டிகளை ஒருங்கிணைத்து நடத்தினர்.

எழும்பூர் தொகுதி, 108 வது வார்டு, சேத்துப்பட்டு, அவ்வைபுரத்தில் கேரம் விளையாட்டுப் போட்டி நடைபெற்றது.

எழும்பூர் தெற்குப் பகுதி வர்த்தகர் அணி அமைப்பாளர் இரா.வெற்றிவேல், 108 வது வட்டத் துணைச் செயலாளர் கே.சீனிவாசன் ஆகியோர் இக்கேரம் போட்டியை ஒருங்கிணைத்து நடத்தினர்.

எழும்பூர் தொகுதி, 77 வது வார்டு, சூளை, காட்டூர் நல்லமுத்து தெருவில் கோலப் போட்டி நடைபெற்றது.

மாவட்டப் பிரதிநிதி கமலகண்ணன், பாக முகவர் கவிதா ஆகியோர் இக்கோலப் போட்டியை ஒருங்கிணைத்து நடத்தினர்.

இவ்விளையாட்டுப் போட்டிகளிலும், கோலப் போட்டியிலும் வெற்றி பெற்ற அணிகள், போட்டியாளர்களுக்குப் பரிசுகள் வழங்கும் நிகழ்ச்சி கே.பி.பார்கில் நடைபெற்றது.

எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் இ.பரந்தாமன், வெற்றி பெற்ற அணிகள், போட்டியாளர்கள், சிறந்த கோல் கீப்பர் (Best Goal Keeper), சிறந்த கோலர் (Best Goaler) ஆகியோருக்கு கோப்பைகள், பரிசுப் பொருட்களை வழங்கியதோடு, விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டவர்களுக்கு 40,000 ரூபாய் மதிப்பிலான விளையாட்டு வீரர்களுக்கான உடைகள் மற்றும் 50,000 ரூபாய் மதிப்பிலான உடற்பயிற்சிக் கூட உபகரணங்கள் ஆகியவற்றையும் வழங்கினார்.

---

### இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள

# தமிழ்நாடு மீனவர்களை விடுவித்திட நடவடிக்கை எடுத்திடுவீர்!

## ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

**சென்னை, ஜன.18-**

**இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்டு அந்நாட்டுச் சிறையில் வாடும் தமிழ்நாடு மீனவர்களையும் அவர்களது மீன்பிடிப்படகுகளையும் உடனடியாக விடுவித்திட நடவடிக்கை எடுக்கக்கோரி நேற்று ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.**

அக்கடிதத்தில், புதுக்கோட்டை மாவட்டம், கோட்டைப்பட்டினம் மீன்பிடித் துறைமுகத்தைச்சேர்ந்த 12 மீனவர்கள், 13.01. 2024 அன்று நெடுந்தீவு அருகே மூன்று விசைப்படகு களில் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது, இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப் பட்டுள்ளதாக முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விவகாரத்தை இலங்கை அரசுடன் உரிய தூதரக வழிமுறைகள் மூலம் எடுத்துச் சென்று, இலங்கை சிறையில் தமிழ்நாடு மீனவர்களையும் அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவித்திட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

---

### நாகாலாந்து அமைதி ஒப்பந்த

# வாக்குறுதிகளை நிறைவேற்றாத பிரதமர் மோடி!

## நடை பயணத்தின்போது ராகுல்காந்தி குற்றச்சாட்டு!

கோயிக்மா, ஜன.18-

நாகாலாந்து அமைதி ஒப்பந்தம் தொடர்பாக, 9 ஆண்டுகளுக்கு முன் பிரதமர் நரேந்திர மோடி அளித்த வாக்குறுதிகளை இன்று வரை நிறைவேற்றாதது கண்டனத்திற்குரியது என ராகுல்காந்தி விமர்சித்துள்ளார்.

காங்கிரஸ் முன்னணி தலைவர் ராகுல்காந்தி, நாகாலாந்து மாநிலம் மோகோக்சங்க்கில் நேற்று தனது 4வது நாள் இந்திய நீதி பயணத்தை தொடங்கி மேற்கொண்டு வருகிறார். வழிநெடுகிலும் ராகுல் காந்தியை ஏராளமான பொது மக்கள், காங்கிரஸ் தொண்டர்கள் உற்சாகமாக வரவேற்றனர். அப்போது சாலையோரம் காத்திருந்த மக்களை சந்தித்த ராகுல் காந்தி, அவர்களிடம் குறைகளை கேட்டறிந்தார். பின்னர், இரு சக்கர வாகன ஓட்டுனர்களிடம் கலந்துரையாடினார். இதனையடுத்து, பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய ராகுல்காந்தி, மற்ற பகுதிகளை போன்று, வடகிழக்கு மாநிலங்களும் முக்கியமானதாகும் என கூறினார். மக்கள் தொகை குறைவாக இருந்தாலும், முக்கியத்துவம் அளிக்கப் பட வேண்டும் என்றும் சமரசம் செய்து கொள்ள கூடாது எனவும் அவர் தெரிவித்தார். நாகாலாந்து அமைதி ஒப்பந்தம் தொடர்பாக, மக்களுக்கு ஒன்பது ஆண்டுகளுக்கு முன் பிரதமர் நரேந்திர மோடி அளித்த வாக்குறுதிகளை இன்று வரை நிறைவேற்றவில்லை என்று ராகுல் காந்தி குற்றஞ் சாட்டினார்.



நெல்லை மாநகர தி.மு.க. சார்பில் திருவள்ளுவர் தினத்தை முன்னிட்டு நெல்லையில் உள்ள அய்யன் திருவள்ளுவர் திருஉருவச் சிலைக்கு மாலை அணிவிக்கும் நிகழ்வு பகுதி செயலாளர் நமச்சிவாயம் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் மாநகரச் செயலாளர் சு.சுப்பிரமணியன் பங்கேற்று மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். நிகழ்வில் விஜிலா சத்யானந்த், அப்துல் கையூம், அண்டன் செல்லத்துரை, கேபிள் குமரேசன், பெப்சி சரவணன், நாதன், உலகநாதன், மணி, டைட்டஸ் கண்ணன், காஜாமைதீன், மைக் மணி, மில் குமார், திராவிட மணி, அலீப் மீரான், பத்மா,மேரி, பிந்து, செய்யது ஆணி ராக்லேன்ட், சைபு நிஷா, ஷெட்டி, ஆறுமுகம் உள்பட கழகத்தினர் கலந்து கொண்டனர்.

---

# தேனி வடக்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் தங்கதமிழ்ச்செல்வன் அறிக்கை!



தேனி, ஜன. 18-

தேனி வடக்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம் நாளை நடைபெறுகிறது என்று மாவட்டக் கழகச் செயலாளர் தங்கதமிழ்ச் செல்வன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து தேனி வடக்கு மாவட்ட செயலாளர் தங்கதமிழ்செல்வன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தேனி வடக்கு மாவட்ட கழக செயற்குழுக்கூட்டம் நாளை (19.01.2024) மாலை 5.00 மணிக்கு என்.ஆர்.டி நகரில் அமைந்துள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் அவைத்தலைவர் பி.டி. செல்லபாண்டியன் தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்திற்கு மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு,பொதுக்குழு உறுப்பினர்கள்,

ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், சார்பு அணி அமைப்பாளர்கள், நகர் மன்ற தலைவர்கள், பேரூர்மன்ற தலைவர்கள், கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:

ஜனவரி 21 ம் தேதி சேலம் மாநகரில் இளைஞரணி சார்பில் நடைபெற உள்ள இரண்டாவது மாநில இளைஞரணி மாநாடு குறித்து.

பாக பொறுப்பாளர்கள் பாக கமிட்டி உறுப்பினர்கள் பணிகள் குறித்து.

சார்பு அணி நிர்வாகிகள் பணிகள் குறித்து.

கழக ஆக்கப்பணிகள்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



தைத்திருநாளை முன்னிட்டு கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின், ஆணைக்கிணங்க இராமநாதபுரம் மாவட்டக் கழகச் செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ., மண்டபம் மேற்கு ஒன்றியக் கழகத்தின் சார்பில் நடைபெற்ற சமத்துவப் பொங்கல் விழாவில் கலந்து கொண்டு வாலாந்தரவை 100 அடி உயர கொடிக்கம்பத்தில் கழக கொடியேற்றி வைத்து, விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்ற குழந்தை களுக்கு பரிசுகள் வழங்கினார் இந்நிகழ்வை ஒன்றியக் கழகச் செயலாளர் கே..ஜே.பிரவின் ஏற்பாடு செய்திருந்தார். இந்நிகழ்வில் முன்னாள் ஒன்றியக் கழகச் செயலாளர் கனகு, மாவட்டத் தொண்டரணி அமைப்பாளர் ராஜா, ஒன்றிய அவைத்தலைவர் பாலசுப்பிரமணி, ஒன்றிய துணைச்செயலாளர் இளம்பரிதி, ஒன்றியப் பொருளாளர் கணேசன், மாவட்டப் பிரதிநிதி முருகபூபதி, கார்மேகம் மற்றும் கிளைக்கழக செயலாளர்கள், பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



“தனது ஒரு ஏக்கர் 52 செண்ட் நிலத்தை அரசுப் பள்ளிக்கு வழங்கிய ஆயி அம்மாளின் கொடையுள்ளத்தைப் போற்றிப் பெருமைப் படுத்துவோம்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பெருமைப் படுத்தியதைத் தொடர்ந்து மதுரையில் உள்ள அவரது இல்லத்திற்கு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேரில் சென்று வாழ்த்துத் தெரிவித்து பாராட்டினார். உடன் அமைச்சர் பி.மூர்த்தி உள்ளிட்ட முன்னணியினர் உள்ளனர்.




## சென்னை பன்னாட்டு புத்தகக் கண்காட்சி:

# அனைவரும் பங்கேற்பீர்! பயன் பெறுவீர்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!

**சென்னை, ஜன. 18 -**

**சென்னையில் அதிக பொருட்செலவில் தமிழ்நாடு அரசு முன்னெடுத்து நடத்தும் பன்னாட்டு புத்தகக் கண்காட்சியில் அனைவரும் பங்கேற்றுப் பயன்பெறுங்கள் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.**

சென்னை பன்னாட்டுப் புத்தகக் காட்சி தொடர்பாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலை தளப்பதிவு வருமாறு:

தமிழ்நாட்டில் நமது அரசு முன்னெடுக்கும் அறிவியக்கத்துக்கு அத்தாட்சியாக கடந்த ஆண்டு முதல் சென்னை பன்னாட்டுப் புத்தகக் காட்சியை நடத்தி வருகிறோம்.

இந்த ஆண்டு சுமார் 40 உலக நாடுகள், 10 இந்திய மாநிலங்களின் பங்கேற்புடன் 50 மொழிகளைச் சேர்ந்த பதிப்பாளர்கள், எழுத்தாளர்கள், கல்வியாளர்கள் உள்ளிட் டோர் கலந்துகொள்ளும் சென்னை பன்னாட்டுப் புத்தக கண்காட்சி 2024 இன்று தொடங்கி 18ஆம் தேதி வரை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் நடைபெற இருக்கிறது.

தொழிற்கல்வி சார்ந்த 200 நூல்கள் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு வெளியிடப்படவுள்ளன. பல்வேறு கருத்தரங்குகள், விவாதங்கள் நடைபெறுகின்றன.

எழுத்தாளர்களுக்கும் வெளிநாட்டுப் பதிப்பு நிறுவனங்களுக்கும் இடையே பாலமாக 20 இலக்கிய முகவர்கள் நியமிக்கப் பட்டுள்ளனர்.

தமிழ்ப் படைப்பாளிகள் உலகெங்கும் சென்று சேரவும், உலக மொழிகளில் உள்ள அறிவுச் செல்வத்தைத் தமிழில் ஆக்கி அளிக்கவும் பெரும் பொருட்செலவில் நமது அரசு முன்னெடுக்கும் இந்த உலக அளவிலான அறிவுத்திருவிழாவில் அனைவரும் பங்கேற்றுப் பயன்பெறுங்கள்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

## நீலகிரி மாவட்டம் சேரங்காடு கிராமத்தில் மின்சாரம் தாக்கி

# உயிரிழந்த 2 பேர் குடும்பத்துக்கு தலா ரூ.2 லட்சம்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, ஜன. 18 -

நீலகிரி மாவட்டம் சேரங்கோடு1 கிராமம் – அரசு பேருந்து மின் கம்பத்தில் மோதிய விபத்தில் மின்சாரம் தாக்கி உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி தெரிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

இது குறித்த அவரது அறிவிப்பு வருமாறு:

நீலகிரி மாவட்டம், பந்தலூர் வட்டம், சேரங்கோடு1 கிராமம், மழவன் சேரம்பாடி என்ற இடத்தில் கடந்த 15.01.2024 அன்று மாலை கூடலூர்அய்யன்கொல்லி வழிதடத்தில் 20 பயணிகளுடன் பயணம் செய்த TN43N0779 என்ற பதிவெண் கொண்ட அரசு பேருந்து மழவன் சேரம்பாடி பேருந்து நிறுத்தத்தின் அருகில் உள்ள மின்கம்பத்தில் எதிர்பாராதவிதமாக மோதிய விபத்தில், மின்கம்பி அறுந்து விழுந்ததில்,

மேற்படி பேருந்து ஓட்டுநர் நாகராஜ் (வயது 49) த/பெ.சதாசிவம் மற்றும் பேருந்தில் பயணம் செய்த சேரங்கோடு 1 கிராமம், பூஞ்சக் கொல்லி பகுதியைச் சேர்ந்த பாலாஜி (வயது 51) த/பெ.பாலச்சந்திரன் ஆகிய இருவரும் மின்சாரம் தாக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்கள் என்ற துயரகரமான செய்தியை அறிந்து மிகவும் வேதனையடைந்தேன்.

நாகராஜ் மற்றும் பாலாஜி ஆகிய இருவரையும் இழந்து வாடும் அவர்களது குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், வருத்தத்தையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவர்களது குடும்பத்தினருக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

## தமிழர் திருநாளை முன்னிட்டு

# நெய்வேலி நகரப்பகுதியில் கொடியேற்று நிகழ்ச்சி!

### சபா.ராஜேந்திரன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

*நெய்வேலி, ஜன. 18 -*

*நெய்வேலி நகர பகுதியில் தமிழர் திருநாளை முன்னிட்டு அனைத்து பகுதிகளிலும் கிளைக் கழக நிர்வாகிகள் சார்பில் கழக கொடி ஏற்றும் நிகழ்ச்சி நடைபெற்றது. நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா ராஜேந்திரன் கலந்து கொண்டு டவுன்ஷிப் பகுதியில் வீதி வீதியாக சென்று சுமார் 45 இடங்களில் கழக நிர்வாகிகளுடன் சென்று கொடி ஏற்றி இனிப்புகள் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் ராசவன்னியன், பண்ருட்டி ஒன்றிய குழு தலைவர் சபா பாலமுருகன், நகரச் செயலாளர் பக்கிரி சாமி, தொ.மு.ச. தலைவர் திருமாவளவன், பொதுச்செயலாளர் பாரி, தலைமை பொதுக்குழு உறுப்பினர் புகழேந்தி, நெய் வேலி நகர அவைத்தலைவர் நன்மாற பாண்டியன், குறிஞ்சிப்பாடி மேற்கு ஒன்றிய செயலாளர் குணசேகரன், பொருளாளர் ஐயப்பன், மாவட்ட கவுன்சில் செயலாளர் பொன் முடி, மத்திய அரசின் சிவில் சப்ளை கார்பரேஷன் சாய் செந்தில், கடலூர் மேற்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ராஜேஷ், சதாம், நெய்வேலி நகர பொருளாளர் மதியழகன், மாவட்டப் பிரதி நிதிகள் ரவிச்சந்திரன், நாசர், இளங்கோ, நகர துணை செயலாளர்கள் செந்தமிழ் செல்வன், கோமதி செந்தில், கருப்பன், முன்னாள் நிர்வாகிகள் வீர ராமச்சந்திரன், குருநாதன், சிறுபான்மை பிரிவு மாவட்ட துணை தலைவர் பிரின்ஸ், தொமுச துணைத் தலைவர் மஜீத், மேற்கு மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் பிலோமின், மாவட்ட தொண்டரணி துணை தலைவர் ஸ்டா லின், ஒப்பந்த சங்க செயலா ளர் பழனிவேல், மாவட்ட மாணவரணி ரமேஷ் மற்றும் துணைத் தலைவர்கள், பகுதி செயலாளர்கள், செயற்குழு உறுப்பினர்கள், சங்க உறுப்பினர்கள், கிளை கழக செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.*

## சேலம் 21ஆம் தேதி இளைஞர் அணி மாநாட்டிற்கு

# சிவகங்கை மாவட்டத்திலிருந்து 300 வாகனங்களில் செல்ல முடிவு!

### அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் தகவல்!

*சிவகங்கை, ஜன. 18 -*

*சிவகங்கை மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் திருப்பத்தூரில் தனியார் திருமண மஹாலில் மாவட்ட அவை தலைவர் வழக்கறிஞர் அ.கணேசன் தலைமையில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் முன்னிலையில் நடைபெற்றது. மாவட்ட கழக துணை செயலாளர் த.சேங்கை மாறன் வரவேற்றுப் பேசினார்.*

*கூட்டத்தில் திருமதி தமிழரசி ரவிக்குமார் எம் எல்.ஏ. பேசினார். செயற்குழு கூட்டத்தில் கலந்து கொண்டு மாவட்ட கழகச் செயலாளரும், கூட்டுறவுத்துறை அமைச்சருமான கேஆர்.பெரியகருப்பன் பேசியதாவது .*

*கழகத் தலைவர் முதல்வர் தளபதி அவர்கள் தலைமையி லான அரசு கடந்த 21/2 ஆண்டுகளாக தமிழகத்தில் மக்கள் நலத் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகின்றது. மக்களின் தேவைகளை அறிந்து திட்டங்களை நமது முதல்வர் அவர்கள் நிறைவேற்றி வருகிறார் .கழக மாநில இளைஞரணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் வருகிற 21ஆம் தேதிசேலத்தில் இளைஞர் அணியின் இரண்டாவது மாநாடு நடைபெற உள்ளது. இந்த மாநாடு தமிழகத்தில் இது வரை நடைபெற்ற அனைத்து மாநாட்டினை மிஞ்சும் வகையில் நடைபெற உள்ளது. இந்த மாநாடு நடைபெற*

*உள்ள பாராளுமன்ற தேர்தலின் வெற்றிக்கு அடித்தளமாக அமைய உள்ளது. வருகின்ற நாடாளுமன்ற தேர்தலில் இந்தியா கூட்டணி வெற்றி பெறும் வகையில் சிறப்பான முறையில் திருப்பு முனை மாநாடாக அமைய உள்ளது. இம்மாநாட்டில் சிவகங்கை மாவட்டத்திலிருந்து இளைஞரணி. யினர் மற்றும் கழகத்தினர் அதிக அளவில் பங்கேற்க வேண்டும். மாவட்டம் முழுவதி லிருந்து கழகத்தினர் 300 வாகனங்களில் செல்வது என்று தீர்மா னிக் கப்பட்டுள்ளது. அதற்கேற்ப கழக சார்புஅணிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், இணைந்து மாநாட்டிற்கு செல்வதற்கான ஏற்பாடுகளை செய்திட வேண்டும்.*

*இதுவரை கழகத்தின் சார்பில் நடைபெற்ற அனைத்து மாநாடுகளிலும் சிவகங்கை மாவட்டத்திலிருந்து அதிக அளவில் கழகத்தினர் பங்கேற்றார்கள். அதற்காக பரிசினையும் பெற்றுள்ளோம். அதைத் தொடர் ந்து சிவகங்கை மாவட்டத்திலிருந்து அதிக அளவில் கழகத்தினர் பங்கேற்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.*

*இவ்வாறு அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் பேசினார் .*

*இந்த கூட்டத்தில் முன்னாள் எம்.எல்.ஏக்கள் சுப. மதியரசன், எஸ்.மாரியப்பன்கென்னடி, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனிசெந்தில்குமார், மாவட்ட சிறுபான்மையினர் நல அமைப்பாளர் என்.எம்.சாக்ளா, ஒன்றிய கழகச் செயலாளர்கள் எஸ்.*

*சண்முகவடிவேலு, விராமதிமாணிக்கம், கே.பாலசுப்பிரமணியன், பூமணி, நா.நெடுஞ்செழியன் , குன்னக்குடி சுப்பிரமணியன், சுப.சின்னதுரை கே.ஆர் . ஆனந்த் துரை. ராஜா மணி, எம்அண்ணாதுரை, எம்.ஏ.கடம்பசாமி, ஆர்.எம். கென்னடி, எம். ஜெயராமன், திருமலை முத்துராமலிங்கம் ,யோக. கிருஷ்ணகுமார், வே. ஆரோக்கியசாமி, பூபால சிங்கம், ரவிச்சந்திரன், நாகனிரவி, ஆறு.செல்வராஜன், வே.தமிழ்மாறன் கா.வெங்கட்ராமன், ,பி.செல்வராஜ், நகர்கழக செயலாளர்கள் என்.குணசேகரன்,பெரி. பாலா,*

*க.பொன்னுச்சாமி, சி.எம். துரை ஆனந்த், பேரூர் கழக செயலாளர்கள் ஆர்.கார்த்தி கேயன், கே.பி.எஸ்.பழனியப்பன், அசோக், கதிர்வேல், பொதுக்குழு உறுப்பினர்கள் பள்ளத்தூர் கே.எஸ். ரவி, த. உதயகுமார், கரு. அசோகன். நிர்வாகிகள் , ஒன்றிய துணைச் செயலாளர் முத்துக்குமார் ஷாஜகான், காளிமுத்து , புதூர் கண்ணன் ராம.ரவி, பொருளாளர் ஏ.எம்.கண்ணன் உட்பட ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் கலந்துகொண்டார்கள்.*

## ‘நான் முதல்வன் திட்டத்தால்’

# மிகப் பெரும் சமூக மாற்றம்!

இருசக்கர வாகன ஷோரூமில் வண்டியை விட்டுவிட்டு அமர்ந்திருந்தேன் ஒரு ஆண்டுக்கு முன்பு படித்த மாணவர் ஒருவர் நின்று இரண்டு ஐம்பதாயிரம் ரூபாய் நோட்டு கட்டுகளை எண்ணிக்கொண்டு இருந்தார்

என்ன தம்பி நல்லா இருக்கியா என்றதும் நல்லா இருக்கேன் சார் ஒரு வருஷமா வேலை பார்த்தேன் இப்போ அப்பாவுக்கு பைக் வாங்கி கொடுக்கலாம் என்று வந்தேன் என்றால் மனதெல்லாம் நிறைந்து விட்டது.

கூடுதல் செய்தி என்னவென்றால் கடந்த ஆண்டு “நான் முதல்வன்” திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்று அந்த மாணவர் கல்லூரியில் வளாக நேர்முகத் தேர்வில் வெற்றி பெற்று அரசின் மூலம் நேரடியாக தனியார் துறையில் பணியில் சேர்ந்தார் என்பதுதான் மிக முக்கியமான செய்தி

கழக அரசு என்ன செய்திருக்கிறதோ, இல்லையோ கண்ணுக்குத் தெரியாமல் மிகப்பெரிய சமூக மாற்றத்தை நிகழ்த்தி இருக்கிறது என்பதே உண்மை

நன்றி தளபதியாரே

நன்றி திராவிட மாடல் அரசே

M. K. Stalin

Udhayanidhi Stalin

**- முனைவர் முகிலன்**

# சைதையில் பொங்கல் விழா!

*சென்னை, ஜன. 18 -*

*சைதை கிழக்குப் பகுதி 172 அ வட்டத்தில் தமிழர் திருநாளை முன்னிட்டு நேற்று கழக நிர்வாகிகள் - முன்னோடிகளுக்கு பேண்ட் ஷர்ட், சேலைகள், கரும்பு ஆகிய வற்றை வட்டக் கழகச் செயலாளர் எஸ். ஆர். செந்தில் தலைமையில் துணை மேயர் மு. மகேஷ் குமார் வழங்கினார்.*

*தமிழர் திருநாள் - தமிழ்ப் புத்தாண்டை முன்னிட்டு மாவட்டக் கழகச் செயலாளரும் அமைச்சருமான மா.சுப்பிரமணியன் ஆலோசனைப்படி, பகுதிச் செயலாளர் இரா.துரைராஜ் வழிகாட்டுதலின்படியும், சைதை கிழக்குப் பகுதி 172 அ வட்டத்தில் வட்டக் கழகச் செயலாளர் எஸ்.ஆர். செந்தில் ஏற்பாட்டில் வட்டக் கழக நிர்வாகிகள், முன்னோடி களுக்கு புத்தாடைகளை, கரும்பு தலைமைச் செயற்குழு உறுப்பினர் துணை மேயர் மு.மகேஷ்குமார் வழங்கினார். உடன் மாவட்ட பிரதிநிதிகள் ஜி. செல்வராஜ், வி. ரமேஷ்குமார், வட்ட அவைத் தலைவர் தா .கோ. வெங்கடேசன், பகுதி பிரதிநிதிகள் ஏ. சக்திவேல், எம். நாராயணமூர்த்தி, ஆர். சீனிவாசன், எஸ். அசோக் குமார், கே.கே.மோகன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.*

## காஞ்சிபுரம் நகர முன்னாள் செயலாளர்

# சன்பிராண்டு கே.ஆறுமுகம் மனைவி திருமதி ஆ.கிருஷ்ணவேனி மறைவு!

### கழகத்தினர் அஞ்சலி!

*காஞ்சிபுரம், ஜன. 18 -*

*முன்னாள் நகர மன்ற தலைவர், முன்னாள் நகர கழக செயலாளர் மற்றும் காஞ்சி தெற்கு மாவட்ட பொருளாளர் சன்பிராண்டு கே.ஆறுமுகத்தின் துணைவியார் திருமதி. ஆ. கிருஷ்ணவேனி அவர்கள் 15.01.2024 - திங்கள்கிழமை அன்று மாலை இயற்கை எய்தினார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்....*



*செய்தியறிந்ததும் கழக முன்னணியினர், தோழர்கள் திரளாகச் சென்று மறைந்த திருமதி ஆ.கிருஷ்ணவேனி அவர்களின் உடல் மீது மலர் வளையம் வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினர்.*

*அன்னாரின் இறுதி ஊர்வலம் 16.01.2024 அன்று மாலை அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு தாயார் குளம் இடுகாட்டில் தகனம் செய்யப்பட்டது.*




பரமன்குறிச்சி அருகே சியோன்நகர் பகுதியில் வெள்ளத்தை வெளியேற்றும் பணியை என்.எல்.சி. அதிகாரிகள் ஆய்வு செய்தனர். திருச்செந்தூர்அடுத்த பரமன்குறிச்சி அருகே சியோன்நகர் பகுதிகளில் மழை வெள்ளத்தின்போது நிவாரணப் பணியில் என்.எல்.சி. சார்பில் அமைச்சர் அனிதாராதா கிருஷ்ணன், தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினர் கனிமொழி ஆகியோரின் ஏற்பாட்டில், என்.எல்.சி. பொறியா ளரும், தி.மு.க. மாநில பொதுக்குழு உறுப்பினருமான புகழேந்தி தலைமையில் என்.எல்.சி. பொது மேலாளர்கள் சிவபிரகாஷ், சந்திரசேகர், பாக்கியநாதன் உள்பட 25பேர் அடங்கிய என்.எல்.சி. குழுவினர் ஈடுபட்டனர். இப்பணியில் மாவட்ட தி.மு.க. பொருளாளர் விபி.ராமநாதன், என்.எல்.சி. இளநிலை பொறியாளர் ஜேம்ஸ் மற்றும் பணியாளர்கள் அருள்,அய்யனார், செந்தமிழ்செல்வன், நெடுஞ்செழியன், ஆனந்தராஜ், ராஜேந்திரன், ராஜாராம், குப்புசாமி, சிவக்குமார், கணேசன், செல்வமணி, நாகராஜ், அந்தோணி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



நெய்வேலி டவுன்ஷிப் வட்டம் 5 பகுதியில் கழக கொடி ஏற்றி தூய்மை பணியாளர்களுக்கு சபா ராஜேந்திரன் எம்.எல்.ஏ. நல உதவிகளை வழங்கினார்.


கலைஞர் 100
1924 - 2023
நாள் : 18.01.2024
காலை 6.30 மணியளவில்.
இடம் : தந்தை பெரியார் சிலை,
அண்ணா சாலை, சென்னை.
பகுத்தறிவுச் சுடரேந்தும் பெரியாரின் படை வீரனே !
பொதுவுடமைச் சிந்தனைக் கொண்ட
அண்ணாவின் கொள்கைத் தீரனே !
மாநில உரிமையை மீட்டெடுக்க போரிடும்
கலைஞரின் பெருமைமிகு பேரனே !
எந்நாளும் புத்துணர்வுடன் உழைக்கும் எங்கள்
தலைவர் தளபதியின் இலட்சிய வாரிசே !
சுடரேந்தி ஓடிவா !
தமிழ்நாட்டில் நீ ஏந்தும் சுடர் இமயத்தில் ஒளி வீசி எரியட்டும் !
திராவிடமாடல்
இந்தியா முழுமைக்கும் பரவட்டும் !
இளைஞரணி மாநாடு வரலாறு படைத்து
வெற்றியடையட்டும் !
நம்ம EGMORE
அன்புடன் : வழக்கறிஞர் இ.பரந்தாமன் பி.ஏ.பி.எல்.,எம்.எல்.ஏ
கழக சட்டத்துறை இணைச் செயலாளர் - எழும்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்

## ‘இந்தியா’வை மீட்க இளைஞர் அணி அழைக்கிறது!

# தோள்தட்டி வாரீர் திராவிட வீரர்களே !

## சேலம் இளைஞர் அணி மாநாட்டுக்கு அழைப்பு விடுத்து - கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வேண்டுகோள்!






மாநில உரிமை மீட்பு முழக்கம்

**நமது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகளை, உங்களில் ஒருவராகத் திகழும் நம் கழகத் தலைவர் - முதலமைச்சர் அவர்களின் அன்பிற்குரிய கோடானு கோடி கழகத் தொண்டர்களில் ஒருவனான நான் இந்தக் கடிதத்தின் வாயிலாக சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்!**

மாநில உரிமை மீட்பு முழக்கமாக நம் கழகத்தின் பெருமைமிகு இளைஞர் அணியின் 2 ஆவது மாநில மாநாடு சேலத்தில் வரும் 21 ஆம் தேதி நடைபெறவிருக்கிற நிலையில், நீங்கள் அனைவரும் மாநாட்டுப் பணிகளுக்காகத் தீவிரமாகச் செயலாற்றி வருவதை நான் அறிவேன்.

டிசம்பர் மாதமே நடைபெற்றிருக்க வேண்டிய மாநாடு என்றாலும், சென்னை உள்ளிட்ட வட மாவட்டங்களில் மிக்ஜாம் புயல் - வெள்ளம் மற்றும் தூத்துக்குடி - திருநெல்வேலி - தென்காசி - கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் பெய்த கனமழையாலும், அங்கு பெருக்கெடுத்த வெள்ளத்தாலும், மாநாட்டினை ஜனவரி 21 ஆம் தேதி நடத்துகிறோம்.

“மக்களிடம் செல் - மக்களுடன் வாழ் - மக்களிடமிருந்து கற்றுக்கொள் - மக்களுக்கான அரசியலை செய்” என்றார் நம் பேரறிஞர் அண்ணா. அண்ணாவின் சொற்களுக்கேற்ப, பேரிடர் நேரத்தில் மக்களுடன் மக்களாக களத்தில் நின்று மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை நம் கழகத்தினர் மேற்கொண்டனர்.

### பா.ஜ.க. ஏற்படுத்தியுள்ள பேரிடர்

இயற்கைப் பேரிடரிலிருந்து இயல்பு நிலையை மீட்டெடுத்து விட்டோம். ஆனால், ஒன்பதரை ஆண்டு காலமாக பா.ஜ.க. ஏற்படுத்தியுள்ள பேரிடரிலிருந்து ஒட்டுமொத்த இந்திய ஒன்றியத்தையும் மீட்க வேண்டிய கடமை நம் எல்லோருக்கும் உள்ளது. அதற்கான பணிகளை ஆக்கப்பூர்வமாக மேற்கொண்டிட வேண்டுமென நம்முடைய தலைவர் அவர்கள் நமக்களித்த வாய்ப்பு தான் ‘இளைஞர் அணி மாநில மாநாடு’.

உங்கள் எல்லோரையும் வரும் ஜனவரி 21-ஆம் தேதி சேலத்தில் நடைபெறவிருக்கும் தி.மு.க. இளைஞரணி இரண்டாவது மாநில மாநாட்டில் சந்திக்கப் போகிறேன் என்று நினைக்கும்போது உள்ளமெல்லாம் உற்சாகம் பெருகி நிற்கிறது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டில் - கழகத்தின் பவள விழா ஆண்டில், இளைஞரணியின் 2 ஆவது மாநில மாநாடு நடைபெறுகிறது.

இந்தத் தருணத்தில் நாம் இளைஞர் அணியில் இருப்பதே நமக்கெல்லாம் பெருமை.

சேலம் மாநாட்டுக்கு, சேலம் மாவட்டம் ஆத்தூர் அருகே 100 ஏக்கர் பரப்பளவில் லட்சக்கணக்கானோர் அமர்ந்து மாநாட்டு நிகழ்ச்சிகளைப் பார்க்கவும் கேட்கவும் பிரம்மாண்ட ஏற்பாடுகளை நமது கழக முதன்மைச் செயலாளர் அமைச்சர் கே.என்.நேரு செய்து வருகிறார்.

பெரியார் நுழைவு வாயில் - அண்ணா திடல் - கலைஞர் அரங்கம் - பேராசிரியர் மேடை - வீரபாண்டியார் கொடி மேடை - முரசொலி மாறன் புகைப்பட கண்காட்சி அரங்கு - வீரபாண்டி செழியன் - வீரபாண்டி ஆ.இராஜா - நீட் ஒழிப்பு போராளிகள் அனிதா - தனுஷ் என மாநாட்டு பந்தல் அமையவுள்ளது.

### உணர்ச்சி பொங்கும் இன்னிசை நிகழ்ச்சி!

மாநாட்டுக்கு முதல் நாளான ஜனவரி 20-ஆம் தேதி மாலை, தமிழ்நாடெங்கும் இளைஞர் அணி மாநில மாநாட்டை கொண்டு சேர்த்த, இரு சக்கர வாகனப் பேரணியானது, முதலமைச்சர் அவர்களின் முன்பாக மாநாட்டுத்திடலில் அணிவகுப்பு செய்கிறது.

தொடர்ந்து இளைஞரணி வரலாற்றை எடுத்துச் சொல்கிற வகையிலான புகைப்படக் கண்காட்சியை நம்முடைய


> “இன்றைய காலகட்டத்தில் இளைஞர்களை எளிதில் ஈர்ப்பதற்கு எத்தனையோ விஷயங்கள் உண்டு. சாதி உணர்வூட்டும், மதவெறியூட்டும் கட்சிகள் ஒருபுறம். அரசியலே சாக்கடை, அரசியல்வாதிகளே ரவுடிகள் என்று அரசியலற்ற (Apolitical) ஆர்வக்கோளாறுகள் வெட்டி வைத்திருக்கும் மேட்டுக்குடிவாதப் படுகுழி மறுபுறம். இவற்றையும், இன்னும் பலவற்றையும் தாண்டி, திராவிட முன்னேற்றக் கழகத்தை நோக்கி நீங்கள் வந்திருக்கிறீர்கள். அதற்காகவே உங்களை எல்லாம் ஆரத்தழுவிப் பாராட்டுகிறேன்.”


முதலமைச்சர் அவர்கள் திறந்து வைக்கிறார்கள். மாநாட்டுக்கு முதல் நாள் மாலை முழுவதும், அண்ணன் இறையன்பன் குத்தூஸ் குழுவினரின் உணர்ச்சி பொங்கும் இன்னிசை நிகழ்ச்சி நடைபெற இருக்கிறது.

மாநாட்டு நாளான, ஜனவரி 21-ஆம் தேதி காலை கழக துணை பொதுச் செயலாளர் - நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்கள், மாநாட்டை கொடியேற்றி வைத்து தொடங்கி வைக்கிறார்கள்.

### மாநில உரிமை மீட்பு முழக்கம்!

இளைஞரணியின் முதல் மாநில மாநாட்டை நெல்லையில் வெற்றிகரமாக நடத்திட்ட அன்றைய கழக இளைஞரணிச் செயலாளர் இன்றைய கழகத் தலைவர் - முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் நம்முடைய மாநில உரிமை மீட்பு முழக்கமான இளைஞர் அணி 2 ஆவது மாநாட்டில் சிறப்புரையாற்ற உள்ளார்கள்.

அதற்கு முன்பாக கழகப் பொதுச் செயலாளர் அமைச்சர் துரைமுருகன், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு உள்ளிட்டத் தலைவர்கள், ஆற்றல்படைத்த கழகத்தின் சொற்பொழிவாளர்கள் இந்த மாநாட்டில் நாளெல்லாம் எழுச்சியுரையாற்ற இருக்கிறார்கள். தெருக்குரல் அறிவின் உணர்ச்சியூட்டும் கலை நிகழ்ச்சி - பாசிஸ்ட்டுகளின் கோர முகத்தை தங்கள் நையாண்டிக் கோடாரியால் பெயர்த்து எடுத்து வரும், புதுகை பூபாளம் கலைக்குழுவினரின் விழிப்புணர்வூட்டும் கலை நிகழ்ச்சியும் நடைபெற இருக்கிறது.

இன்றைய காலகட்டத்தில் இளைஞர்களை எளிதில் ஈர்ப்பதற்கு எத்தனையோ விஷயங்கள் உண்டு. சாதி உணர்வூட்டும், மதவெறியூட்டும் கட்சிகள் ஒருபுறம். அரசியலே சாக்கடை, அரசியல்வாதிகளே ரவுடிகள் என்று அரசியலற்ற (Apolitical) ஆர்வக்கோளாறுகள் வெட்டி வைத்திருக்கும் மேட்டுக்குடிவாதப் படுகுழி மறுபுறம். இவற்றையும், இன்னும் பலவற்றையும் தாண்டி, திராவிட முன்னேற்றக் கழகத்தை நோக்கி நீங்கள் வந்திருக்கிறீர்கள். அதற்காகவே உங்களை எல்லாம் ஆரத்தழுவிப் பாராட்டுகிறேன்.

நமது கழகம், அதன் வரலாற்றில் எத்தனையோ பெரிய மாநாடுகளை, திருப்புமுனை மாநாடுகளைக் கண்டிருக்கிறது. அந்த மாநாடுகளுள் ஒன்றை மட்டும் உங்களுக்கு குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

1970ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் திருச்சியில் நடந்த மாநாடு. பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைந்த ஓராண்டுக்குப் பின், அண்ணா அவர்களில்லாமல் நடைபெற்ற முதல் தி.மு.கழக மாநாடு. அது மாவட்ட மாநாடு தான் என்றாலும் ஒரு மாநில மாநாடு போல பிரம்மாண்ட ஊர்வலத்துடன் நடைபெற்றது. அந்த மாநாட்டில் தான்,

**1. அண்ணா வழியில் அயராது உழைப்போம்,**

**2. ஆதிக்கமற்ற சமுதாயம் அமைத்தே தீருவோம்,**

**3. இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம்,**

**4. வன்முறை தவிர்த்து வறுமையை வெல்வோம்,**

**5. மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி எனும் இந்த ஐம்பெரும் முழக்கங்களை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வெளியிட்டார்கள் என்பது நமக்கு தெரியும். அந்த மாநாட்டுக்கென்று மற்றொரு சிறப்பும் உண்டு.**

### உலக அரங்கில் புகழ்பெற்ற உரைகள்!

உலக அரங்கில் புகழ்பெற்ற உரைகள் என்றெல்லாம் சொல்கிறார்களே, அந்த வரிசையில் வைத்துப் பார்க்கும் அளவுக்கான ஓர் உரையை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆற்றினார். எல்லோரையும் வளர்த்து ஆளாக்கிய அண்ணா இல்லாத நிலையில், கழக முன்னணியினரை எப்படி அரவணைக்க வேண்டும், தொண்டர்களுக்கு எப்படி தெம்பூட்ட வேண்டும் என்பதற்கு உதாரணமாய் அமைந்த அந்த உரையின் முற்பகுதி நெஞ்சுக்கு நீதி நூலில் இடம்பெற்றுள்ளது. அதை எப்போது படித்தாலும் எனது கண்கள் கலங்கும்.

அந்த மாநாட்டு மேடையில் அமர்ந்திருந்த முன்னணித் தலைவர்கள் நாவலர் அவர்கள், மதியழகன் அவர்கள், சிற்றரசு அவர்கள், என்.வி.என் அவர்கள், பேராசிரியர் அன்பழகன் தாத்தா, மதுரை முத்து அவர்கள், மன்னை நாராயணசாமி அவர்கள், அன்பில் தர்மலிங்கம் தாத்தா என ஒவ்வொருவரின் பெயரையும் குறிப்பிட்டு, கலைஞர் அவர்கள் பேசுவார்.

**"நாவலர் இங்கே இருக்கிறார், நீ எங்கே போய்விட்டாய் அண்ணா?" என்று ஒவ்வொரு தலைவருக்கும் அண்ணாவுக்கும் இருந்த நெருக்கத்தை எடுத்துச் சொல்லி "அவர் இங்கே இருக்கிறார், நீ எங்கே போனாய் அண்ணா?" என்று தொடர்ந்து கேட்டுவிட்டு, கலைஞர் அவர்கள் உருக்கமாய்ப் பேசுவார்கள், "அண்ணா, நீ இங்கே தானிருக்கிறாய். இந்தப் பேச்சை எல்லாம் கேட்டுக் கொண்டிருக்கிறாய். இந்த ஆரவாரத்தைக் காண்கிறாய், இங்கே இருக்கின்ற உன்னுடைய அருமைத் தங்கைகளையெல்லாம் பார்க்கிறாய். தம்பிகளின் பட்டாளங்களைக் காண்கிறாய். மலர் போன்ற மழலைக் குழந்தைகளின் இதழ் ஓரத்தில் முத்தமிடுகிற அண்ணனே, நீ எங்கும் போகவில்லை. இங்கேதான் இருக்கிறாய்! இங்கேதான் இருக்கிறாய்! எங்களுடைய நெஞ்சங்களில்தான் இருக்கிறாய் அண்ணனே! இங்கேதான் இருக்கிறாய்!" தங்களுக்கு எல்லாமுமாக இருந்த பேரறிஞர் அண்ணா உடலால் மறைந்திருந்தாலும் அந்த மாநாட்டில் கலந்து கொண்ட ஒவ்வொருவரின் முகத்தையும் அண்ணாவின் முகமாகப் பார்த்தார் கலைஞர் அவர்கள்.**

**இப்போது, சேலத்தில் நாம் கூடவிருக்கிற திமுகவின் இளைஞரணி மாநாடும் அப்படி தான். கலைஞர் அவர்கள் மறைந்த நிலையில் நம் கழக இளைஞரணி நடத்தும் முதல் மாநில மாநாடு. எப்படி திருச்சி மாநாட்டில் மறைந்த அண்ணா பங்கேற்றாரோ, அதே போல முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும் நம்முடைய மாநாட்டில் பங்கேற்கப் போகிறார். இந்த மாநாட்டில் நம் கழக முன்னணித் தலைவர்களைப் பார்க்கும்போதும், இளைஞரணித் தோழர்களாகிய உங்கள் ஒவ்வொருவரின் முகத்தைப் பார்க்கும்போதும் எனக்கு கலைஞர் அவர்களின் முகமாகத் தான் தெரியும்.**

### மாநாட்டின் வெற்றி!

சேலம் மாநாட்டில் நாம் கூடப்போகும் எண்ணிக்கையையும் கட்டுப்பாட்டையும் பார்த்து "இன்னும் ஒரு நூறு ஆண்டுகளுக்கு திராவிட இயக்கத்தை யாராலும் அழிக்க முடியாது" என்று நமது கலைஞர் அவர்கள் நம்பிக்கை கொள்ள வேண்டும். அந்த வகையில் இந்த மாநாட்டின் வெற்றி அமைய வேண்டும். ஏற்கனவே, ஒரு நூற்றாண்டை தாண்டியது நமது இயக்கம். கடந்துபோன அந்த நூற்றாண்டு நமது இயக்கத்துக்கு பலமான அஸ்திவாரத்தை அமைத்துக் கொடுத்தது.

நமது இயக்கத்தின் தொடக்க நாட்களில் கூட்டங்கள் நடத்துவது, பிரசாரம் செய்வது, கழகக் கொடியேற்றுவது எல்லாம் சாதாரணமான விஷயமல்ல. மேடையில் நமது தலைவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போதே, கற்களை வீசித் தாக்குவார்கள். அதற்கெல்லாம் அஞ்சாமல் தோளில் கிடந்த துண்டை எடுத்து முண்டாசுக் கட்டிக் கொண்டு இன்னும் வேகமாகப் பேசியிருக்கிறார்கள். பிரசாரத்தைக் கலைக்க கூட்டத்திற்கு இடையில் கழுதைகளையும் மாடுகளையும் விரட்டிவிட்டார்கள்.

நம் ஊர்வலம் செல்லும் வழிகளில் செருப்புத் தோரணம் கட்டி அவமதித்தார்கள். தந்தை பெரியார் நடத்திய மதுரை கருஞ்சட்டை மாநாட்டுப் பந்தல் தீவைத்து கொளுத்தப்பட்டது. புதுச்சேரியில் நமது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களையே தாக்கி சாலையோரத்தில் போட்டுவிட்டுப் போனார்கள்.

தூத்துக்குடி கே.வி.கே.சாமி போன்ற இயக்கச் செயல்வீரர்கள் சிலர் படுகொலையும் செய்யப்பட்டார்கள். போராட்டங்களில் பங்கேற்றத் தொண்டர்கள் சிறைகளில் சித்திரவதைச் செய்யப்பட்டார்கள். நம் உயிருக்கு நிகரான தமிழ் மொழியைக் காக்க நம் கழகத் தொண்டர்கள் பலர் தங்கள் இன்னுயிரை ஈந்தார்கள். இந்த இயக்கத்தை வளர்த்தெடுக்க எல்லாவிதமான தியாகங்களையும் செய்தார்கள்.

### திராவிட இயக்கத்தால் பாதுகாக்கப்பட்ட தமிழ்நாடு!

இத்தனைப் பேரின் உழைப்பையும் தியாகத்தையும் நாம் வீணாக்கப்போகிறோமா அல்லது விதையாக்கப் போகிறோமா என்பது தான் நமக்கு முன் இருக்கும் கேள்வி. இந்தக் கேள்விக்கு பொறுப்பான விடை கூறும் நாள் தான் ஜனவரி 21. திராவிட இயக்கத்தால் பாதுகாக்கப்பட்ட தமிழ்நாட்டைக் காக்க - இந்திய ஒன்றியத்தை மீட்க நாம் உறுதி எடுக்கப் போகும் இடம் தான் சேலம் மாநாடு.

ஏதோ சிலருக்கு ஆட்சி அதிகாரத்தில் பதவி கிடைக்க வேண்டும் என்பதற்காக உருவாக்கப்பட்ட இயக்கம் அல்ல நமது இயக்கம். பதவி நிலையானதும் அல்ல. ஆனால், நமது கழகம் நிலையானதாக இருக்க வேண்டும், நமது கொள்கை நிலையானதாக இருக்க வேண்டும். இந்த உணர்வு நமக்கு வேண்டும்.

பேராசிரியர் மா.நன்னன் அவர்கள் 'திராவிட இயக்க உணர்வு என்பது இயற்கை உணர்வு' என்று சொன்னார். ஆம், நமது இயக்க உணர்வு இயற்கையானது. எங்களுக்கு ஏன் பள்ளி, கல்லூரிகளில் இடமில்லை என்று கேட்கும் உணர்வு இயற்கை தானே. நாங்கள் ஏன் கோயிலுக்கு வெளியே நிற்க வேண்டும் என்று கேட்பது இயற்கை தானே. நாங்கள் ஏன் தோளில் துண்டு போடக்கூடாது என்று குரல்கொடுப்பது இயற்கை தானே, நீ எப்படி உயர்ந்த சாதி, நான் எப்படி தாழ்ந்த சாதி என்று கேட்பது இயற்கை தானே, எங்கள் தாய்மொழியாம் தமிழ் இருக்க, ஏன் இந்தியைக் கொண்டுவந்து திணிக்கிறீர்கள் என்று கேட்பது இயற்கை தானே, ஆண்களைப் போல பெண்களுக்கும் உரிமைகள் வேண்டும் என்று கோருவது இயற்கையானது தானே.

எனவே, நமது இயக்கம் காலத்தின் தேவை கருதி இயற்கையாக உருவான இயக்கம். இந்த இயற்கை உணர்வை, செயற்கையாக உருவாக்கப்பட்ட வர்ணாசிரம உணர்வையூட்டி அழிக்க முடியுமா என்ன? முடியாது, முடியவே முடியாது என்று முரசறைந்து கூறிடத்தான் சேலம் மாநாடு.

**அதிலும் குறிப்பாக, இந்தியாவில் அரசியல் நெருக்கடி ஏற்பட்டிருக்கிற மிக முக்கியமான காலகட்டத்தில் இந்த மாநாடு நடக்கிறது. பெரியார், அண்ணா, கலைஞர் காலத்தில் இருந்த எதிரிகளுக்கு கொஞ்சமேனும் நாணயம் இருந்தது. நமது கழகத் தலைவர் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் சந்திக்கும் எதிரிகளுக்கு நாணயம் என்பது கிஞ்சிற்றும் கிடையாது.**

**அதன் காரணமாகத் தான், இப்போதெல்லாம் ஜனநாயகக் களத்தில் நேரடி அரசியல் மோதல் என்பது குறைந்து, சூழ்ச்சியாக விசாரணை அமைப்புகளைக் கொண்டு மோதுகிறார்கள். சமூக ஊடக நிறுவனங்களைக் கட்டுப்படுத்தி தங்களுக்கு சாதகமான பொய்ச் செய்திகளைப் பரப்பி மோதுகிறார்கள்.**

**மதவெறியை, சாதிவெறியைத் தூண்டிவிட்டு மோதுகிறார்கள். சமூகநீதிக்கு ஆதரவானவர்களைப் போலவும் தமிழ்மொழியை நேசிப்பவர்கள் போலவும் நாடகமாடுகிறார்கள். இதன் மூலம் அவர்களின் கொள்கைகளை, கொள்ளைப்புற வாயிலாக நம் மக்கள் மீது திணிக்கிறார்கள். நேரடியாக எதையும் செய்யத் திராணியற்றவர்கள்.**

இந்தச் சவால்கள் யாவற்றையும் தகர்த்தெறிந்து தவிடுபொடியாக்கும் கடமை நம் முன்னே நிற்கிறது. அதை நாம் வெற்றிகரமாக செய்து முடிப்போம் என்கிற உறுதியை நமது கழகத் தலைவருக்கு கொடுக்கத் தான் நாம் சேலத்தில் கூடுகிறோம். இளைஞரணி என்பது நம் கழகத் தலைவர்கள் வகுக்கும் வியூகங்களை களத்தினில் செய்து முடிக்கும் படையாகும். நம் மீதான தாக்குதல்கள் பலமுனைகளில் இருந்து வரும். அவற்றையெல்லாம் முறியடித்து நாம் முன்னேறிச் செல்ல வேண்டும். அத்தகையப் படையின் கட்டுப்பாட்டை நாம் சேலத்தில் காட்ட வேண்டும்.

### போர்க்கலை

சன் சூ (Sun Tzu) என்கிற பண்டையச் சீனாவின் படை வல்லுனர் எழுதியப் போர்க்கலை (The Art of War) என்னும் நூலில் ஒன்றைச் சொல்லுவார். "Victorious warriors win first and then go to war, while defeated warriors go to war first and then seek to win."

இதனை தமிழில் சொல்வதானால், "வெற்றிக்குரிய வீரர்கள் தம் வெற்றியை முன்பே எட்டிவிட்டு பின்னர் தான் போர்க்களம் புகுவார்கள். ஆனால், தோல்விக்குரிய வீரர்களோ போர்க்களம் புகுந்துவிட்டு பிறகு எப்படி வெற்றிபெறுவது என்று பார்ப்பார்கள்".

இதனை சற்று விளக்கமாக சொன்னால், ஒரு திறன்வாய்ந்த தளபதி போர்க்களத்துக்கு செல்லும் முன்பு திட்டமிடல், முன்தயாரிப்புகள், வியூகங்கள், எதிரியின் பலமறிதல், பலவீனமறிதல் என எல்லாவற்றையும் கணக்கிட்டு முறைப்படுத்திவிட்டு தான் தமது வீரர்களை களத்துக்கு அனுப்புவான். மாறாக, களத்தில் இறங்கியப் பின்னர் திட்டங்களை, வியூகங்களை வகுத்துக் கொண்டிருந்தால் தோல்வி உறுதி.

இந்த அளவுகோலின்படி பார்த்தால், நம் கழகத்தின் தலைவர் - முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நாம் சந்தித்த எல்லாத் தேர்தல் களங்களிலும் நம் கழகம் வெற்றிக்கொடியே நாட்டியுள்ளது.

நம் தலைவர் அவர்களின் முன்தயாரிப்பு, அவர்கள் அமைத்த வலுவானக் கூட்டணி, அவர் வகுத்த வியூகங்கள் தான் தமிழ்நாட்டில் நம் எதிரிகளை திணறடித்துக் கொண்டிருக்கிறது. இத்தகையச் சிறப்பு வாய்ந்த நம் தலைவர் அவர்களின் வழிகாட்டுதல் இப்போது இந்திய அளவில் தேவைப்படுகிறது.

நாடாளுமன்றத் தேர்தலை இந்தியா கூட்டணி இந்தந்த வகைகளில் சந்தித்தால் தான் எதிரியை எளிதில் வீழ்த்த முடியும் என்று அதன் கூட்டணித் தலைவர்கள் கூட்டத்தில் முழங்கியவர் நம் தலைவர் அவர்கள். இப்போது நடந்து முடிந்திருக்கிற 5 மாநில சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் நம் தலைவரின் கருத்துகளுக்கு மேலும் கவனத்தைச் சேர்த்துக் கொண்டிருக்கிறது.

### அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த சமயம்!

இந்த அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த சமயத்தில் தான் நாம் சேலத்தில் திரள இருக்கிறோம். இந்த மாநாட்டை ஏதோ கூட்டினோம் முடித்தோம் என்று செய்ய விரும்பவில்லை நமது தலைவர் அவர்கள். அவர் தான் திறன்மிக்க தளபதி ஆயிற்றே!

என்னை ஒவ்வொரு மாவட்டமாகச் சென்று இளைஞரணித் தோழர்களைச் சந்தித்து, மாநாட்டுக்கு திரண்டு வருவதற்கான தயாரிப்பினையும் ஆலோசனைகளையும் வழங்கச் சொன்னார். கடந்த பல மாதங்களாகவே நான் தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்து, உங்களை எல்லாம் உங்கள் மாவட்டத்திலேயேச் சந்தித்துப் பேசினேன். உங்களுடைய எழுச்சியும் - உற்சாகமுமே மாநாட்டின் வெற்றியை உறுதிபடுத்தும் வகையில் அமைந்தது.


> “இந்தச் சவால்கள் யாவற்றையும் தகர்த்தெறிந்து தவிடுபொடியாக்கும் கடமை நம் முன்னே நிற்கிறது. அதை நாம் வெற்றிகரமாக செய்து முடிப்போம் என்கிற உறுதியை நமது கழகத் தலைவருக்கு கொடுக்கத் தான் நாம் சேலத்தில் கூடுகிறோம்.
>
> இளைஞரணி என்பது நம் கழகத் தலைவர்கள் வகுக்கும் வியூகங்களை களத்தினில் செய்து முடிக்கும் படையாகும். நம் மீதான தாக்குதல்கள் பலமுனைகளில் இருந்து வரும். அவற்றையெல்லாம் முறியடித்து நாம் முன்னேறிச் செல்ல வேண்டும். அத்தகையப் படையின் கட்டுப்பாட்டை நாம் சேலத்தில் காட்ட வேண்டும்.”


அதன்பிறகு, நம் மாநாட்டின் நோக்கத்தை வலியுறுத்தி கன்னியாகுமரியில் தொடங்கி வள்ளுவர் - பெரியார் - அண்ணா - கலைஞர் மண்டலம் என தமிழ்நாடு முழுவதும் ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிவாரியாக 234 தொகுதிகளிலும் கருப்பு-சிவப்பு உடையணிந்த இளைஞரணித் தோழர்களின் இருசக்கர வாகன அணிவகுப்பு நடந்தது. இதற்கிடையில், நம் கழகம் சார்பாக நீட் விலக்கு மசோதாவுக்கு குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளிக்க வலியுறுத்தி 50 லட்சம் கையெழுத்துகளைப் பெற்று அதனை சேலம் மாநாட்டில் நம் கழகத் தலைவர் அவர்களிடம் ஒப்படைக்கலாம் என்று திட்டமிட்டோம்.

ஆனால், தேனீயைக் காட்டிலும் சுறுசுறுப்பான நமது தோழர்களின் அயராத உழைப்பால் 80 லட்சம் கையெழுத்துகளையும் கடந்து, மேலும் தொடர்ந்து கையெழுத்துகள் குவிந்தவண்ணம் உள்ளன.

இது தான், போர்க்களத்துக்கு தமது வீரர்களை ஒரு தளபதி தயார்ப்படுத்தும் முறை. அதனை நமது தலைவர் அவர்கள், கச்சிதமாக செய்கிறார்கள்.

இதே தயாரிப்போடு தான் சேலம் இளைஞர் அணி மாநில மாநாடு கழகத்தின் கொள்கைத் திருவிழாவாக நடைபெறவுள்ளது. தமிழ்நாட்டு அரசியலில் மட்டுமன்றி, இந்திய ஒன்றிய அரசியலின் வரலாற்றில் என்றென்றும் நிலைத்திருக்கப் போகிற இந்த மாநாட்டுக்கு இன்னும் சில நாட்கள் மட்டுமே உள்ளன.

என தருமை இளைஞரணித் தோழர்களே! வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மாநாட்டுக்குப் புறப்படத் தயாராவீர்.

நமது உயிருடன் கலந்திருக்கும் முத்தமிழறிஞர் கலைஞர் 1981ஆம் ஆண்டு இதே சேலம் ஆத்தூரில் தந்தை பெரியாரின் சிலையைத் திறந்து வைத்து ஆற்றிய பேருரையில்,

**"ஓர் இயக்கத்தை வளர்த்தவர்கள், அந்த இயக்கத்தோடு சேர்ந்து வளர்ந்திருப்பவர்கள் அந்த இயக்கத்திற்குப் புதிய இரத்தம் வர வேண்டும் என்று விரும்புகிறவர்கள் - அப்படி வருகின்ற புதிய இரத்தங்களை அரவணைத்து இளைய தலைமுறையினருடைய உள்ளங்களிலே இயக்கத்தினுடைய இலட்சியங்களைப் பதியவைக்கின்ற பணியிலே ஈடுபடுவதும், வருகின்ற இளைய தலைமுறையும் - பழைய தலைமுறை பட்ட பாட்டினால் அல்லவா இந்தப் பலன் நாட்டிற்குக் கிடைத்திருக்கிறது என்று பழைய தலைமுறைக்கு மதிப்பளித்து காரியமாற்றவும் இந்த இயக்கம் நடைபோட வேண்டும் என்பதுதான் என்னுடைய ஆவலாகும்" என்று சொன்னார்.**

அந்த கலைஞர் அவர்களின் ஆவலை நிறைவேற்றும் வகையில் அதே சேலம் ஆத்தூரில் நமது மாநாடு அமைய வேண்டும். புதிய ரத்தம் பாய்ச்சவும், இயக்கத்தின் இலட்சியங்களை அவர்கள் மனதில் பதிய வைக்கவும், மூத்தத் தலைவர்களின் வழிகாட்டுதல்படி நடக்கவும் உறுதியேற்கத் தான் நம் இளைஞரணியின் மாநில மாநாடு! உங்கள் ஒவ்வொருவரையும் மாநாட்டுப் பந்தலில் என் கண்கள் தேடும்.

**தமிழ்நாட்டை மட்டுமல்ல - ஒட்டு மொத்த இந்தியாவையும் காக்க,**

**தி.மு.கழக இளைஞர் அணி மாநில மாநாட்டுக்கு அலைகடலென திரண்டு வருக - வெற்றியைத் தருக !**

# சார்வாகர் கூறும் தேசியத்தின் உண்மைகளும், பொய்களும் - அறிஞர் பார்த்தா சாட்டர்ஜி அளித்துள்ள அபூர்வ நூல்!


**வ**ங்கத்தைச் சேர்ந்த உலகப் புகழ்பெற்ற சிந்தனையாளர், அறிஞர் பார்த்தா சாட்டர்ஜி. அரசியல் தத்துவப் பேராசிரியர். நியூயார்க்கிலுள்ள கொலம்பியா பல்கலைக்கழகத்தில் நான் ஆய்வு படிப்பை மேற்கொண்டபோது என் ஆசிரியராக விளங்கியவர். இவருடைய நூல்கள் பலவும் பல்வேறு நாடுகளில் பயிலப்படும் தேசியம் குறித்த கோட்பாட்டு நூல்களாகும். குறிப்பாக இந்திய தேசியம் எப்படி உருப்பெற்றது, அது முழுமையானதா, அந்த தேசிய சிந்தனையில் உள்ள குறைபாடுகள் என்னவென்பதை பல்வேறு நூல்களில் திறம்பட விவாதித்துள்ளவர்.




பார்த்தா சாட்டர்ஜி இரண்டு ஆண்டுகளுக்கு முன் ஆங்கிலத்தில் ஒரு அபூர்வமான நூலை வெளியிட்டார். அதன் தலைப்பு: Truth and Lies of Nationalism - as told by Carvak என்பதாகும். நாடு கோவிட் பெருந்தொற்று காலத்தில் பாதிக்கப்பட்டிருந்தபோது அவர் வீட்டு வாயிலில் ஒரு பெட்டி வைக்கப்பட்டிருந்ததாகவும், அதில் அவர் விலாசம் இடப்பட்டிருந்ததாகவும் அதனுள் ஒரு கையெழுத்துப்படி இருந்த தாகவும் கூறுகிறார். அந்த கையெழுத்துப்படிதான் சார்வாகர் என்று தன்னை கூறிக்கொள்ளும் ஒருவர் அவரே பேசுவது போல எழுதிய இந்த இந்திய தேசியம் குறித்த நூலாகும்.

பார்த்தா சாட்டர்ஜி அந்த கையெழுத்துப் படியை ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்து, குறிப்புகள் சேர்த்து நூலாக வெளியிட்டார். அந்த நூல் அனைத்து மக்களும் எளிதில் புரிந்துகொள்ளும்படி இந்திய தேசிய உருவாக்கத்தின் பல்வேறு அம்சங்களை விவாதிப்பதாக விளங்குகிறது. அதை நானும், நண்பர் அசோகா பல்கலைக்கழக பேராசிரியர் ரவீந்திரன் ஸ்ரீராமச்சந்திரனும் தமிழில் மொழியாக்கம் செய்துள்ளோம். இப்போது நடைபெறும் சென்னை புத்தகக் காட்சியில் இந்த நூல் எதிர் வெளியீட்டின் அரங்கில் கிடைக்கிறது.

இந்த நூலைக்குறித்து நான் இங்கே எழுத காரணம் இன்றைய நிலையில் இந்திய தேசியம் சந்திக்கும் முக்கிய பிரச்சினைகளையெல்லாம் இந்த நூல் சிறப்பாக விவாதிக்கிறது என்பதுதான். அதனால் நாட்டின் அரசியலில் அக்கறை கொண்டோர் அனைவரும் படித்துப் பார்ப்பது பயன்தரும்.




**தொன்மையும், பன்மையும்**

இந்த நூலின் தொடக்கமே தெளிவுபடுத்தும் ஒரு விஷயம் என்னவென்றால் இன்று உலகிலுள்ள எல்லா தேசங்களுமே நவீனமானவை என்பவைதான். தொன்மையான தேசம், பண்டைய தேசம் என்று எதுவும் கிடையாது. இந்தியக் குடியரசு 1950ஆம் ஆண்டு உருவானபோதுதான் இன்றைய இந்தியா என்பது அதிகாரபூர்வமாக பிறந்தது. அதற்கு முன் எந்தக்காலத்திலும் இந்த நிலப்பரப்பு ஒரே அரசியல் அமைப்பு கொண்டதாக இருந்ததில்லை. ஒரே பேரரசின் கீழ் கூட இருந்ததில்லை.

இப்படிச் சொல்லும்போது நாம் தேசத்திற்கு எதிரானவர்கள் இல்லை. உண்மையான தேசபக்தி என்பது உண்மைகளைப் பேசுவதுதானே தவிர கற்பிதங்களை பேசுவதல்ல. இப்போது ஒருவர் கேட்கலாம்; ஒரே நாடாக இருக்காவிட்டால் என்ன, இந்திய நிலப்பரப்பு முழுவதிலும் ஒரு பண்பாட்டுத் தொடர்ச்சி இருந்ததாகக் கருதலாமே என்று கேட்கலாம். அதையும் இந்த நூல் விரிவாக விவாதிக்கிறது. இந்தியாவின் பண்பாடுகள் அளப்பரிய பன்மை கொண்டவை என்பதை சுட்டிக்காட்டுகிறது.

**இந்தியாவுக்கு ஒற்றை பண்பாட்டு அடையாளத்தைக் கற்பிக்க முடியாது; அந்த பண்பாடு தொன்று தொட்டு மாற்றங்களில்லாமல் தொடர்ந்து வருவதாகக் கூற முடியாது. பல்வேறு மாற்றங்களுக்கு உட்பட்ட பல்வேறு பண்பாடுகளின் தொகுப்புதான் இந்தியா என்பதை ஏராளமான தரவுகளுடன் எடுத்துரைக்கிறார் சார்வாகர்.**

**எல்லைகளும், தொல்லைகளும்!**

தேசத்தின் எல்லைகளைக் காக்கும் ராணுவ வீரர்களைப் பற்றியெல்லாம் மிகவும் உணர்ச்சிகரமான சொல்லாடல்களுக்கு நாம் பழக்கப்பட்டிருப்போம். நாட்டின் பாதுகாப்பு என்பது முக்கியம்தான். ஆனால் நாட்டின் எல்லைகள் என்பவை கடவுளால் உருவாக்கப்பட்ட புனிதமான கோடுகள் அல்ல. அது பல்வேறு அதிகாரிகள், இந்தியாவைப் பொறுத்தவரை பல்வேறு பிரிட்டிஷ் அதிகாரிகள் பலவிதமான சந்தர்ப்பங்களில் வகுத்த எல்லைகள்தான்.

சதாத் ஹசன் மண்டோ என்ற எழுத்தாளரின் புகழ்பெற்ற டோபா தேக் சிங் என்ற கதையை வாசித்திருப்பீர்கள். எல்லைக்கோட்டினை வரைவதன் அபத்தமான தற்குறித்தன்மையை அவல நகைச்சுவையாக வெளிப்படுத்தும் புகழ்பெற்ற கதை அது. எல்லா திசைகளிலும் இந்தியாவின் எல்லைகள் எப்படியெல்லாம் தீர்மானிக்கப்பட்டன என்பதை இந்த நூலில் விரிவாக விளக்குகிறார் சார்வாகர்.

**எல்லைகள் வகுத்ததில் உருவான தொல்லைகள் பல வகைப்பட்டவை. ஒரு சில பிரச்சினைகள் காலப்போக்கில் பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கப்பட்டன. சில பிரச்சினைகள் இன்னும் தீர்க்கப்படாமல் புகைந்து கொண்டு உள்ளன. எந்தெந்த பகுதிகள் இந்தியாவுடன் இணைய வேண்டும், எவை இணைய வேண்டாம் என்பதெல்லாமே எந்த அடிப்படைகளில் முடிவு செய்யப்பட்டன என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.**

**ராஜன் குறை கிருஷ்ணன்**
*பேராசிரியர்*
*அம்பேத்கர் பல்கலைக் கழகம், புதுடெல்லி.*




மேலும் இந்தியாவும், பாகிஸ்தானும் இரண்டு நாடுகளாக பிரிந்து சுதந்திரம் பெற்றபோது நூற்றுக்கணக்கான தன்னாட்சி உரிமையுள்ள சமஸ்தானங்கள் இருந்தன. அவை தனித்திருப்பதா, இந்தியாவுடன் இணைவதா என்பது ஒரு கேள்வி. ஒரு சில சமஸ்தானங்கள் இந்தியாவுடன் இணைவதா, பாகிஸ்தானுடன் இணைவதா என்பது மற்றொரு கேள்வி. இதில் முடிவுகள் எட்டப்பட்ட விதம் ஒருபடித்தானவை அல்ல. காஷ்மீர் சமஸ்தானத்தின் பிரச்சினை இன்றளவும் புகைந்துகொண்டுதான் இருக்கிறது. உலகிலேயே ஏராளமாக ராணுவும் குவிக்கப்ப ட்டுள்ள பகுதிகளில் ஒன்று காஷ்மீர் எனப்படுகிறது.

**இதையெல்லாம் இந்த நூல் விரிவாகப் பேசக் காரணம், இந்தியா எப்படி வரலாற்றுப் போக்கில் கட்டமைக்கப்பட்ட தேசம் என்பதை விளக்குவ தற்குத்தான். வேதங்கள், இதிகாசங்கள், புராணங்கள் ஆகிய எவற்றையும் காட்டி இன்றைய இந்திய தேசத்தின் உருவாக்கத்தை விளக்க முடியாது. இது ஒரு நவீன அரசியல் ஏற்பாடு. அது அனைத்து மக்களுக்கும் நன்மை புரியும் ஏற்பாடாக இருக்க வேண்டும் என்பதே முக்கியம்.**

**தேசம் என்பது அரசா, மக்களா?**

பார்த்தா சாட்டர்ஜி அவரது பல்வேறு நூல்களிலும், கட்டுரைகளிலும், எழுப்பிய முக்கியமான கேள்வி தேசம் என்பது அரசா, மக்களா என்பதுதான். தேசிய அரசா அல்லது மக்களின் தேசமா என்று கேட்கிறார் அவர். இந்தக் கேள்வியை நாம் பொறுமையாகவும், நிதானமாகவும் புரிந்துகொள்ள வேண்டும்.

பண்டைய வரலாற்றில் அரசர்களே இறையாண்மையின் வடிவமாக இருந்தார்கள். ஓர் அரசர் எந்தெந்த பகுதிகளை அவர் கட்டுப்பாட்டில் கொண்டு வருகிறாரோ அது அவருடைய நாடு. சோழ மன்னர் தர்மபுரி பகுதியை கைப்பற்றினால் அது அவருடைய ஆட்சிக்கு உட்பட்டது. அதை ராஷ்டிரகூடர்கள் கைப்பற்றினால் அது அவர்களுக்கு உரியதாகிவிடும். அதிகாரம் மன்னர்கள், மந்திரிகள், தளபதிகள், மதகுருமார்கள், நிலப்பிரபுக்கள் என்று வடிவம் பெற்று இருந்தது.




நவீன அரசியலில் ஏற்பட்ட மிகப்பெரிய மாற்றம் மக்களாட்சி என்பதுதான். அது என்னவென்றால் இறையாண்மை அனைத்து மக்களுக்கும் உரியது என்ற கருத்தாக்கம். அப்படியென்றால் அனைத்து மக்களும் தங்களைத் தாங்களே ஆட்சி செய்து கொள்ள வேண்டும். அப்படி செய்வதற்காக மக்கள் உள்ளூரில், தல மட்டத்தில் தொடங்கி தங்கள் பிரதி நிதிகளைத் தேர்ந்தெடுப்பார்கள். உள்ளூர் நிர்வாகம், மாநில நிர்வாகம், தேசிய அளவில் ஒன்றிய அரசின் நிர்வாகம் எல்லாமே மக்களின் பிரதிநிதிகளால் வழி நடத்தப்படும். அதற்கான அரசியலமைப்பு சட்டம் இயற்றப்படும்.

அதனால்தான் இந்தியாவிலிருந்த ஐந்நூறுக்கும் மேற்பட்ட மன்னர்களெல்லாம் குடியரசில் இணைய நேர்ந்தது. சிறிது காலம் அவர்களுக்கு இழப்பீடாக மன்னர் மானியம் தரப்பட்டது. ஆனால் 1971ஆம் ஆண்டு இந்திரா காந்தி அந்த இழப்பீடு தருவதை ஒழித்துவிட்டார். மன்னர் மானிய ஒழிப்பு என்று அறியப்பட்ட முற்போக்கு நிகழ்வு இது.

ஆனால் இப்போதும் என்ன ஒரு வேறுபாடு என்றால், மக்களிடையே பணபலமும், சமூக செல்வாக்கும் பெற்ற சிலர் அரசினை கட்டுப்படுத்துவதில் அதிக ஆற்றலுடன் இருக்கி றார்கள். இடதுசாரிகள் இதை ஆளும் வர்க்கம் என்று அழைப்பார்கள். எளிய மக்கள் அரசால் ஆளப்படுபவர்களாக இருக்கிறார்கள். அரசியல்வாதிகள் எளிய மக்களிலிருந்து உருவாகி அவர்களுக்காக செயல்பட்டா லும், அரசினை கட்டுப்படுத்தும் அதிகாரம் படைத்ததாக ஆளும் வர்க்கம், பெரு முதலீட்டி யம் விளங்கி வருகிறது.



பெருமுதலீட்டியத்தின் நலன்களுக்கும், வெகுமக்களின் நலன்களுக்கும் முரண்பாடு உள்ளது. அதனால்தான் இந்தியா உட்பட உலக நாடுகள் பலவற்றிலும் பொருளாதார ஏற்றத்தாழ்வு அதிகரித்து வருகிறது. தோராயமாகச் சொன்னால் சொத்துகளை வைத்திருப்பதிலும் சரி, வருமானத்திலும் சரி 10% பேரே 50% சொத்துகளும், வருமானமும் உள்ளவர்களாக இருக்கிறார்கள். மீதமுள்ள 90% மக்கள் மீதமுள்ள 50%ஐ பங்கு போட்டுக்கொள்கிறார்கள் எனலாம்.

அரசிடமுள்ள அதிகாரம் முதலீட்டியத்தின் நலனுக்காக செயல்படுகிறதா, மக்களின் நலனுக்காக செயல்படுகிறதா என்பதே கேள்வி. அரசியல் கட்சிகளிடையே நிகழும் தேர்தல் மோதல்கள் அவர்களை மக்களுக்காக சில நலத்திட்டங்களை செய்ய நிர்பந்திக்கின்றன. ஆனால் முதலீட்டிய நலனை அனுசரிக்காவிட்டால் அவர்களால் நாட்டின் பொருளாதாரத்தை நிர்வகிக்க முடியாது. இதுதான் வலதுசாரி, இடதுசாரி என்ற பிரிவாக அரசியலில் விளங்குகிறது.

ஒரு திரைப்படப் பாடல் உங்களுக்கு நினைவிருக்கும்.

**நாடென்ன செய்தது உனக்கு**
**என்று நீயும் கேட்பது எதற்கு**
**நீயென்ன செய்தாய் அதற்கு**
**என்று கேட்டால் நன்மை உனக்கு...**

இந்தப் பாடலின் நோக்கம் எல்லோரும் சுயநலத்துடன் வாழக்கூடாது, பொது நன்மை கருதி வாழ வேண்டும் என்பதாகும். ஆனால் இப்படிக் கூறுப வர்கள், பொருளாதார ஏற்றத்தாழ்வு, சமூக ஏற்றத்தாழ்வு ஆகியவற்றை நீக்குவதில் முன்னிற்கா விட்டால் நாட்டுக்காக வாழ்வது என்பது அரசுக்காக வாழ்வது, அல்லது ஆளும் வர்க்கத்துக்காக வாழ்வது என்றாகி விடும்.

**ஒன்றியத்தில் குவியும் அதிகாரமும், மாநில சுயாட்சியும்**

**மக்களிடம் அதிகாரம் பரவலாக சென்றடைய வேண்டும் என்பதற்கான முதல் படி ஒன்றிய அரசிடம் குவிந்துள்ள அதிகாரம் மாநிலங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்பதாகும். இந்த நூல் அதைத் தெளிவாக வலியுறுத்துகிறது. ஒன்றிய அரசின் அதிகாரத்தின் பின்னால் பெருமுதலீட்டிய சக்திகள் அணிவகுத்து நிற்கின்றன.**

மக்களின் அரசியல் வெளிப்பாட்டுக்கு மாநில அரசியலே முக்கியமான களம் அமைத்துத் தருகிறது. முதலில் மாநில அரசியல் வெகுமக்களின் மொழியில் அமைந்துள்ளது. இரண்டாவது அவர்களின் அவசியத் தேவைகளான கல்வி, சுகாதாரம், சட்டம் ஒழுங்கு ஆகியவை மாநில அரசின் பொறுப்பில் உள்ளன. எனவேதான் மாநில அரசுகளுக்கு அதிக அதிகாரம், அதிக நிதிப்பங்கீடு என்பது மக்களுக்கு அதிக அதிகாரம் என்பதாகவே பொருள்படும். ஒன்றிய அரசிடம் அதிகாரத்தை குவிப்ப தென்பது மக்களை மேலும் அந்நியப்படுத்துவதாகும்.

அனைத்தையும் தொகுத்துப் பார்த்தால் இன்றைய இந்துத்துவ அரசியல் என்பது இந்தியாவின் தொன்மையைப் பேசி ஒற்றை இந்துத்துவ அடையாளத்தை உருவாக்குவது, ஒன்றிய அரசில் அதிகாரத்தைக் குவிப்பது, பெரு முதலீட்டிய ஆதரவு என்று செயல்படுவதைப் பார்க்கலாம்.

சார்வாகரின் நூல் எட்டு இயல்களில் இந்தப் போக்கினை விரிவாகச் சுட்டிக்காட்டி விளக்குவதுடன், இளைஞர்கள் விழிப்புணர்வுடன் மக்களை மேம்பட்ட வாழ்வினை நோக்கி அழைத்துச் செல்ல வேண்டும் என்றும் கோருகிறது.

அனைவரும் எளிதில் வாசித்து புரிந்து கொள்ளும் படி ஏராளமான தரவுகளுடன் எழுதப்பட்டுள்ள இந்த நூல் பலருக்கும் அரசியலில் பல தெளிவுகளைத் தரும் என்றே நம்புகிறேன். அதன் பொருட்டே அதைத் தமிழில் மொழியாக்கம் செய்துள்ளோம்.

நன்றி : **'மின்னம்பலம்'** இணையதளம்




விருதுநகர் நகர தி.மு.க. சார்பில் தைப்பொங்கல் மற்றும் தமிழர் திருநாள் விழா கொண்டாடப்பட்டது. அண்ணா சிலை அருகில் பொங்கல் வைத்து அவரது திருவுருவச் சிலைக்கு விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.சீனிவாசன் மாலை அணிவித்தார். உடன் எஸ்.ஆர்.எஸ். தனபாலன், எஸ்.ஆர்.எஸ்.ஆர்.மாதவன், ஆர்.கிருஷ்ணகுமார், ஸ்ரீராம், காசிராஜன், ஆர்.பி.மதியழகன், எஸ்.சுதாகர், கோதண்டராமர், ஏ.எஸ்.கே.ரமேஷ் குமார், ஆ.மரியராசு, அசோக், நேஷனல் ராமர், மலையரசன், எல்.திருமாறன், பாண்டி நகர் சுரேஷ், புரோஸ்கான், ஜோசப் ராஜ், ஆர்.பழனிச்சாமி, டிரைவர் கண்ணன், இந்திரா தனபாலன், துளசி ராஜன், மாதவி ரமேஷ் மற்றும் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.



வேலூர் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் திருவள்ளுவர் தினத்தை முன்னிட்டு அவரது உருவ படத்திற்கு மாவட்ட தி.மு.க. அவைத் தலைவர் தி.அ.முகமதுசகி மாலை அணிவித்தார். அருகில் மாநகரச் செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., பொருளாளர் சி.நரசிம்மன், முன்னாள் அமைச்சர் டாக்டர் வீ.எஸ்.விஜய், மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், மண்டல குழு தலைவர் வீனஸ் நரேந்திரன் தி.அ.முனவர் பாஷா மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




சேலத்தில் நடைபெறும் இளைஞர் அணி மாநாட்டின் எழுச்சிப் பாடலாக ‘உரிமை மீட்க வா’ என்கிற பாடலை வெளியீடு தயாரிப்பாளர்கள் சவுதி அரேபியா கிழக்கு மண்டலம் மயிலாடுதுறை வெங்கடேசன் திருச்சி ஆரிஃப் மக்பூல். கவிஞர் நாகூர் பாரி எழுதியவர்கள். தமிழ்நாடு சிறுபான்மை நல ஆணைய துணைத் தலைவர் கலைமாமணி டாக்டர் இறையன்பன் குத்தூஸ் பாடியவர். சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான் வெளியிட லண்டன் அயலக அணி தி.மு.க. பொறுப்பாளர் பைசல் பெற்றுக் கொண்டார். இதில் முகவை சீனி முஹம்மது துறையூர் கமால் சவுதி அரேபியா அயலக அணியின் அபூ ரயான் ஆசிப், சிவக்குமார், நூர் முஹம்மது கான், கள்ளக்குறிச்சி ஃபாரூக், ஏர்போர்ட் கணேசன், ஜுபைல் யாசின் அஞ்சப்பர் ஜியான், திருச்சி யூனிஸ்.ஃபாரூக் ராஜா, சென்னை இம்ரான், முருகன் மாரிராஜ், ரவி, ரிஷி உணவகம் சாகுல், சென்னை ஜியான், நாகர்கோவில் சாகுல் ஹமீது, முகவை அப்துல் ரஹ்மான், மதுரா முத்து, தமாம் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



சேலம் மாவட்டம் பெத்தநாயக்கன்பாளையத்தில் வரும் 21 ஆம் தேதி கழக இளைஞரணி மாநில இரண்டாவது மாநாடு நடைபெறுகிறது. இதனையடுத்து மாநாட்டு திடலில் உள்ள பணிகளை வீட்டு வசதி வாரியத் துறை அமைச்சர் முத்துசாமி பார்வையிட்டார். அப்போது மாவட்ட செயலாளர்கள் எஸ். ஆர். சிவலிங்கம், இரா.ராஜேந்திரன் எம் எல்.ஏ ,டி.எம்.செல்வகணபதி, மாவட்ட துணை செயலாளர்கள் சுரேஷ்குமார் ,சின்னதுரை, டாக்டர் தருண், ஏ.ஏ.ஆறுமுகம் ,ஒன்றிய செயலாளர்கள் மூர்த்தி, சிவராமன், தங்க மருதமுத்து, பேரூர் செயலாளர்கள் பாபு, வெங்கடேசன் , சோமசுந்தரம் , மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

### ராகுல் காந்தி நடைபயணம்

# ‘இந்தியா’ கூட்டணிக்கு ஊக்கச் சக்தியாக மாறும்!

## ‘தினகரன்’ தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, ஜன. 18 -

ராகுல் காந்தியின் 2வது கட்ட நடைபயணம் இந்தியா கூட்டணிக்கு ஊக்கச் சக்தியாக மாறும் என்று ‘தினகரன்’ நாளேடு நேற்றைய தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

இதுகுறித்து தினகரன் தலையங்கம் வருமாறு:-


தினகரன்
ஜனவரி 17, 2024 புதன்கிழமை
ராகுல் யாத்திரை
மீண்டும் ஒரு யாத்திரையை தொடங்கி இருக்கிறார் காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி. முதல் யாத்திரை கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரை தொடர்ந்தது. அந்த யாத்திரை பெயர் இந்திய ஒற்றுமை யாத்திரை. இப்போது ராகுல் தொடங்கியிருக்கும் யாத்திரை பெயர் இந்திய ஒற்றுமை நீதி யாத்திரை. கடந்த ஆண்டு மே மாதம் 3ம் தேதி முதல் கலவரத்தால் சிக்குண்டு கிடக்கும் மணிப்பூர் மாநிலத்தில் இருந்து ராகுல் தொடங்கியிருக்கும் இந்த யாத்திரை மார்ச் 20 அல்லது 21ம் தேதி மும்பையில் முடியும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது.
ராகுல் கன்னியாகுமரியில் தொடங்கிய யாத்திரை 2022 செப்டம்பர் 7 முதல் 2023 ஜனவரி வரை 136 நாட்கள் நடந்தது. தமிழ்நாட்டில் 4 நாட்கள், கேரளாவில் 18, கர்நாடகாவில் 21, ஆந்திராவில் 4, தெலங்கானாவில் 12, மத்தியபிரதேசத்தில் 16, ராஜஸ்தானில் 18, அரியானாவில் 12, டெல்லியில் 2, உபியில் 5, பஞ்சாப்பில் 11, இமாச்சலில் 1, ஜம்மு காஷ்மீரில் 11 நாட்கள் நடந்தது. 14 மாநிலங்கள் வழியாக பயணம் மேற்கொண்ட ராகுல் கிட்டத்தட்ட 4,080 கிமீ தொலைவை நடந்தே கடந்து இருந்தார். அந்த நடைபயணத்தின் முடிவால் கர்நாடகா, இமாச்சல், தெலங்கானாவில்

மீண்டும் ஒரு யாத்திரையை தொடங்கி இருக்கிறார் காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல்காந்தி. முதல் யாத்திரை கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரை தொடர்ந்தது. அந்த யாத்திரை பெயர் இந்திய ஒற்றுமை யாத்திரை. இப்போது ராகுல் தொடங்கியிருக்கும் யாத்திரை பெயர் இந்திய ஒற்றுமை நீதி யாத்திரை. கடந்த ஆண்டு மே மாதம் 3ம் தேதி முதல் கலவரத்தால் சிக்குண்டு கிடக்கும் மணிப்பூர் மாநிலத்தில் இருந்து ராகுல் தொடங்கியிருக்கும் இந்த யாத்திரை மார்ச் 20 அல்லது 21ம் தேதி மும்பையில் முடியும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது.

ராகுல் கன்னியாகுமரியில் தொடங்கிய யாத்திரை 2022 செப்டம்பர் 7 முதல் 2023 ஜனவரி வரை 136 நாட்கள் நடந்தது. தமிழ்நாட்டில் 4 நாட்கள், கேரளாவில் 18, கர்நாடகாவில் 21, ஆந்திராவில் 4, தெலங்கானாவில் 12, மத்தியபிரதேசத்தில் 16, ராஜஸ்தானில் 18, அரியானாவில் 12, டெல்லியில் 2, உபியில் 5, பஞ்சாப்பில் 11, இமாச்சலில் 1, ஜம்மு காஷ்மீரில் 11 நாட்கள் நடந்தது. 14 மாநிலங்கள் வழியாக பயணம் மேற்கொண்ட ராகுல் கிட்டத்தட்ட 4,080 கிமீ தொலைவை நடந்தே கடந்து இருந்தார்.

அந்த நடைபயணத்தின் முடிவால் கர்நாடகா, இமாச்சல், தெலங்கானாவில் காங்கிரஸ் ஆட்சி அமைக்க முடிந்தது. அதே சமயம் ராஜஸ்தானில் ஆட்சி பறிபோனது. மிகவும் நம்பிக்கையாக இருந்த மத்தியபிரதேசத்திலும் மீண்டும் தோற்றது. சட்டீஸ்கர் ஆட்சியும் கையை விட்டு போனது. இப்போது மணிப்பூரில் தொடங்கியிருக்கும் 2வது கட்ட ராகுலின் யாத்திரை நடைபயணம் மற்றும் பஸ் பயணமாகவும் அமைய உள்ளது. நாகாலாந்து, அசாம், அருணாச்சல், மேகாலயா, மேற்குவங்கம், பீகார், ஜார்க்கண்ட், ஒடிசா, சட்டீஸ்கர், உபி, மபி, ராஜஸ்தான், குஜராத் வழியாக இந்த பயணம் மகாராஷ்டிரா மாநிலம் மும்பையில் முடிவடைய உள்ளது.

மொத்தம் 67 நாட்கள், 15 மாநிலங்கள், 6713 கிமீ தொலைவுக்கு நடைபயணமாகவும், பஸ் மூலமாகவும் ராகுல்காந்தி இந்த பயணத்தை மேற்கொண்டு வருகிறார். 100 மக்களவை தொகுதிகள் வழியாக இந்த பயணம் செல்லும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. குறிப்பாக உபியில் அதிகபட்சமாக 11 நாட்களும், அசாம் மாநிலத்தில் 8 நாட்களும், மபியில் 7 நாட்களும் ஒதுக்கப்பட்டுள்ளன. நீதியாத்திரை என்று பெயர் வைக்கப்பட்டாலும், நிச்சயம் இந்த யாத்திரை வரவிருக்கும் மக்களவை தேர்தலை குறிவைத்து மேற்கொண்டு இருக்கும் பயணம் என்பது தெளிவானது.

பா.ஜவுக்கு மாற்றாக இந்தியா கூட்டணி உருவாகி இருக்கும் இந்த நேரத்தில் தொகுதி பங்கீடு பேச்சு வார்த்தை, வேட்பாளர் தேர்வு பணிகளுக்கு முன்பு ராகுல்காந்தி முதற்கட்ட பிரசாரமாக இந்த நீதி யாத்திரை மூலம் மக்களை சென்று சந்தித்து முடித்து இருப்பார். ஜன.22ம் தேதி நடக்கும் அயோத்தி ராமர் கோயில் திறப்பு விழாவை எப்படி பா.ஜ தேர்தல் அஸ்திரமாக பயன்படுத்தி வருகிறதோ அதே போல் ராகுல் மேற்கொண்டு இருக்கும் இந்த யாத்திரை நிச்சயம், காங்கிரஸ் கட்சிக்கு மட்டு மல்ல, இந்தியா கூட்டணிக்கு வடமாநிலங்களில் மிகப்பெரிய ஊக்க சக்தியாக மாறும்.

இவ்வாறு தினகரன் நாளேட்டின் தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

### ஆயி அம்மாளின்

# கொடையுள்ளத்தைப் போற்றிப் பெருமைப்படுத்துவோம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!

சென்னை, ஜன.18-

“தனது ஒரு ஏக்கர் 52 சென்ட் நிலத்தை அரசுப் பள்ளிக்கு வழங்கிய ஆயி அம்மாளின் கொடையுள்ளத்தைப் போற்றிப் பெருமைப் படுத்துவோம்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைத்தளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூகவலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-

**கல்விதான் உண்மையான, அழிவற்ற செல்வம். ஒரு தலைமுறையில் பெறும் கல்வி ஏழேழு தலைமுறைக்கும் அரணாக அமையும் என்பதை உணர்ந்து தனது 1 ஏக்கர் 52 சென்ட் நிலத்தை அரசுப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் கட்டுவதற்காகக் கொடையாக அளித்துள்ளார் மதுரை கொடிக்குளத்தைச் சேர்ந்த ஆயிஅம்மாள் என்கிற பூரணம் அவர்கள்.**



**முதலமைச்சரின் சிறப்பு விருது வழங்கப்படும்!**

**ஆயிஅம்மாளின் கொடையால் ஆயிரக்கணக்கான மாணவர்கள் பயன்பெறுவார்கள். கல்வியையும், கற்பித்தலையும் உயர்ந்த அறமாகப் மதிக்கும் தமிழ்ச் சமூகத்தின் அடையாளமாக விளங்கும் ஆயிஅம்மாளின் கொடையுள்ளத்தைப் போற்றிப் பெருமைப்படுத்தும் வகையில் வருகிற குடியரசு நாள் விழாவில் அரசின் சார்பில் அவருக்கு முதலமைச்சரின் சிறப்பு விருது வழங்கப்படும்.**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைத்தளத்தில் பதிவிட்டுள்ளார்.

### திருவள்ளுவர் திருநாள்

# திருவள்ளுவர் திருவுருவச் சிலைக்கு மலர் வணக்கம் நிகழ்ச்சி!

## தமிழ்நாடு அரசின் சார்பில் நடைபெற்றது!

சென்னை, ஜன. 18 -

திருவள்ளுவர் திருநாளையொட்டி தமிழ்நாடு அரசின் சார்பில் அவரது சிலைக்கு மலர் வணக்கம் நிகழ்ச்சி நடை பெற்றது.

கடந்த 2055 ஆண்டுச் சிந்தனை வளத்திற்கு ஊற்றுக் கண்ணாக விளங்கி இனிவரும் நூற்றாண்டுகளின் சிந்தனைக் களத்திற்குத் தடம் அமைத்துத் தந்துள்ளது திருக்குறள்.

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட நம் தமிழ்நாடு அதனால்தான் திருக்குறள் உலகப்பொதுமறை எனப் போற்றப்படுகிறது. வள்ளுவத்தின் மாண்பு சொல்லிலடங்காது. இதன் சிறப்பு கருதியே இந்திய மொழிகளிலும், உலக மொழிகளிலும் திருக்குறளைத் தம்வயமாக்கிக் கொண்டுள்ளன.

வள்ளுவத்தில் கட்டுக் கடங்காத கற்பனை இல்லை; பொய்யும் புரட்டு மில்லை; மனிதன் வாழ் வாங்கு வாழ்வதற்குரிய வழிமுறைகளையே வள்ளுவர் வகுத்துரைக்கிறார்.

வள்ளுவம் ஒரு வாழ்வியல் நூல். உலகத்தின் எந்த மூலையில் உள்ள எவரும் பின்பற்ற தக்க கருத்துக் களஞ்சியம். ஆயிரக்கணக்கான வழிநூல்கள் தோன்ற இடம் தந்து, அள்ள அள்ளக் குறையாத பெட்டகமாய்த் திகழ்வது திருக்குறளின் தனிச்சிறப்பு.

விடுதலைக்கு முன்னரே தந்தை பெரியார் குறட்பாவைத் தமிழர்தம் அடையாளச் சின்னமாக எடுத்துக் காட்டினார். விடு தலைக் குப்பின்னர் பேரறிஞர் அண்ணா திருக்குறளைத் திருப்பணியாகவே கொண்டு எழுச்சியுறச் செய்தார். குறளோவியம் கண்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சொல்லிலும் கல்லிலும் திருவள்ளுவரை வடித்துக் காட்டித் திருவள்ளுவருக்கு என்றும் அழியாத சின்னத்தை உருவாக்கியதோடு தமிழகத்தின் தலைநகரில் கோட்டம் அமைத்துத் தமிழ் மக்களின் அன்புப் பெருக்கினை வெளிப்படுத்தினார்.

ஏனைய தமிழ் நூல்களிற் காணப்படாத சிறப்பியல்புகள் திருக்குறளுக்கு உண்டு. நூற்பயனாகிய அறம், பொருள், இன்பம், வீடு என்பவற்றைத் தெளிவாகக் கூறிய நூல்களுள் குறளுக்கு ஈடானது வேறு இல்லை.

அனைத்துத் தமிழர்களாலும் அறிந்து போற்றப்படுபவராகவும் தமிழர்களின் பண்பாட்டு செறிவின் அடையாளமாகவும் கருத்துக் கருவூலமாகவும் திகழும் திருவள்ளுவரின் உலகுக்குப் பாறைசாற்றும் வகையில் பெருமையினை தைத்திங்கள் இரண்டாம் நாளில் தமிழ்நாடு அரசின் சார்பாக ஆண்டுதோறும் திருவள்ளுவரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்துச் சிறப்பு செய்யப்படுகிறது.

இவ்வகையில் இவ்வாண்டு திருவள்ளுவர் திருநாளை முன்னிட்டு தைத் திங்கள் இரண்டாம் நாளன்று (16.01.2024) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு சென்னை, நுங்கம்பாக்கம், வள்ளுவர் கோட்டத்தில் உள்ள திருவள்ளுவர் திருவுருவச் சிலைக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் மலர் வணக்கம் நிகழ்ச்சி நடைபெற்றது. அந்நிகழ்ச்சியில் அமைச்சர் பெருமக்கள், சீர் பெருமக்கள், தமிழறிஞர்கள், அரசு அலுவலர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

வாழ்க வள்ளுவர்! வளர்க குறள் நெறி !

### நெல்லை மாவட்டம் இராதாபுரத்தில்

# முத்துவேலர் அஞ்சுகத்தம்மாள் அறக்கட்டளை சார்பில் சமத்துவப் பொங்கல்!

## சட்டப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு தொடங்கி வைத்தார்!

நெல்லை, ஜன.18 -

நெல்லை மாவட்டம் இராதாபுரத்தில் கலைஞர் அவர்களின் பெற்றோர்கள் முத்துவேலர் அஞ்சுகத்தம்மாள் அறக்கட்டளை சார்பில் தமிழர் திருநாளை முன்னிட்டு சமத்துவப் பொங்கல் 200க்கும் மேற்பட்ட பெண்கள் பொங்கலிடும் வழிபாடு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்வு சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு தலைமையில் நடைபெற்றது.

கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க தமிழ்நாடு முழுவதும் தமிழர் திருநாளான சமத்துவப் பொங்கல் திருவிழா வெகு சிறப்பாக நடைபெற்றது.

அதன்படி நெல்லை மாவட்டம் இராதாபுரத்தில் காமராஜர் பேருந்து நிலையத்தில் உள்ள முன்னாள் முதல்வர் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் பெற்றோர்களான முத்துவேலர் அஞ்சுகத்தம்மாள் ஆகியோரின் திருவுருவச் சிலைக்கு சட்டப் பேரவை தலைவர் மு.அப்பாவு தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.அதனைத் தொடர்ந்து சிலை அமைப்புக்குழு சார்பில் 15 வது நிகழ்வாக தமிழர் திருநாளான சமத்துவப் பொங்கல் விழாவை சட்ட பேரவைத் தலைவர் மு.அப்பாவு துவக்கி வைத்தார்.

இந்நிகழ்வில் சுற்று வட்டார கிராமங்களைச் சேர்ந்த 200க்கும் மேற்பட்ட பெண்கள் பங்கேற்று சமத்துவப் பொங்கல் இட்டனர். தொடர்ந்து தமிழர்களின் பண்பாடு கலாச்சாரத்தை வெளிப்படுத்தும் கரகாட்டம், ஒயிலாட்டம், குதிரை ஆட்டம், மாடாட்டம், கிழவன், கிழவி ஆட்டம், கம்பாட்டம், நையாண்டி மேளம், நாதஸ்வரம் என பல்வேறு கிராமியக் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றது.கலைஞர் அவர்களால் கலைமாமணி விருது பெற்று தற்போது வரை கிராமிய கலையில் ஈடுபட்டு வரும் கலைஞர்கள் கௌரவிக்கப் பட்டனர்.

சமத்துவப் பொங்கலை முன்னிட்டு நலத்திட்ட உதவிகளை சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு வழங்கினார்.

இந்நிகழ்வில் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் வி.எஸ்.ஆர்.ஜெகதீஸ், தலைமைச் செயற்குழு உறுப்பினர் சித்திக்,ஒன்றிய செயலாளர்கள் ஜோசப் பெல்சி, ராஜன் உள்பட ஊராட்சி மன்றத் தலைவர்கள்,கழகத்தினர் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



சேலம் கிழக்கு மாவட்டம் அயோத்தியாப்பட்டணம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் தை 1 முன்னிட்டு சமத்துவப் பொங்கல் வைத்து கழக இரு வண்ணக் கொடியேற்றி இனிப்புகள் வழங்கி கழக நிர்வாகிகளுக்கு கழக இரு வண்ண பதிக்கப்பட்ட வேட்டியை கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் வழங்கினார். நிகழ்ச்சியில் தெற்கு ஒன்றியச் செயலாளரும் முன்னாள் ஒன்றியக் குழுத் தலைவருமான ஏ.விஜயகுமார், ஒன்றியக் குழுத் தலைவர் ஹேமலதா விஜயகுமார், முன்னாள் எம்.எல்.ஏ. தமிழ்செல்வன் மற்றும் ஒன்றிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# தாம்பரத்தில் பொங்கல் பரிசுத் தொகுப்பு!

தாம்பரம், ஜன. 18 –

தாம்பரம் மாநகர தி.மு.க. மற்றும் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பெருங்களத்தூர் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் மேற்கு தாம்பரம் டி.ஜி.பி திருமண மண்டபத்தில் கழக நிர்வாகிகள், பொதுமக்களுக்கு தொடர் நிகழ்ச்சியாக 4 இடங்களில் 5000 பேருக்கு புத்தாடை அடங்கிய பொங்கல் பரிசு தொகுப்பு கழக பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., எஸ்.ஆர். ராஜா எம்.எல்.ஏ. ஆகியோர் வழங்கினர்.

தமிழர் திருநாள் மற்றும் தைப் பொங்கல் விழாவினை முன்னிட்டு பெருங்களத்தூர் மேற்கு பகுதி கழக சார்பில் டி.காமராஜ் ஏற்பாட்டிலும் தாம்பரம் மேற்கு பகுதி தி.மு.க. சார்பில் எஸ்.இந்திரன் ஏற்பாட்டிலும் தாம்பரம் மாநகராட்சி 3வது மண்டல குழுத்தலைவர் ச.ஜெய பிரதீப் எற்பாட்டிலும் மதுரப்பாக்கம் ஊராட்சி தி.மு.க. சார்பில் ஊராட்சி மன்ற தலைவர் மு.வேல்முருகன், அமுதா வேல்முருகன் ஏற்பாட்டிலும் கழக பொருளாளர் நாடாளுமன்ற குழுத் தலைவர் டி.ஆர்.பாலு எம்.பி . கலந்து கொண்டு சிறப்புரையாற்றி சமத்துவப் பொங்கலிட்டு அனைவருக்கும் புத்தாடைகள் அடங்கிய பொங்கல் பரிசு தொகுப்பை தாம்பரம் சட்டமன்ற தொகுதி முழுவதிலும் உள்ள கழக நிர்வாகிகள், கழக தோழர்களுக்கு மற்றும் பொதுமக்களுக்கு வழங்கினார்.

இந்நிகழ்ச்சிகளில் மாநகர கழக செயலாளர் எஸ். ஆர்.ராஜா எம்.எல்.ஏ., மாநகர, பகுதி கழக நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் வட்ட கழக செயலாளர்கள், கழக தோழர்கள் அனைவரும் கலந்து கொண்டு பொங்கல் பரிசுத் தொகுப்பினை மகிழ்ச்சியுடன் பெற்றுச் சென்றனர்.

### மாநில விவசாய அணி இணைச் செயலாளர்

# ஆர்.அருள்செல்வம் தந்தை ஜி.ராமதாஸ் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி

நாகை ஜன 18 -

மயிலாடுதுறை மாவட்டத்தை சேர்ந்த சட்டமன்ற முன்னாள் உறுப்பினரும், மாநில விவசாய அணி இணைச்செயலாளர் ஆர். அருள்செல்வம் தந்தை ஜி.ராமதாஸ் (வயது 90) 13.1.2024 அன்று இரவு இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம் மறைந்த ராமதாஸ்க்கு மகன்கள் ஆர். ரவிச்சந்திரன், ஆர். அருள்செல்வம் மகள்கள் பிரேமலதா. புஷ்பலதா, தாமரைச்செல்வி.ஆகியோர் உள்ளனர்.

மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார் கோயில் ஒன்றியம் அரசூர் நாயுடு தெருவில் அவரது இல்லத்தில் வைக்கப்பட்ட அன்னாரது உடலுக்கு “கழக நிர்வாகி கள், கழகத்தினர் ஏராளமானவர்கள் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார்கள்.



தர்மபுரி கிழக்கு மாவட்டம் நகர உழவர் சந்தையில் தர்மபுரி கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தடங்கம்.பெ.சுப்பிரமணி தலைமையில் சமத்துவப் பொங்கல் விழா நடைபெற்றது. விழாவில் மாவட்டப் பொருளாளர் வே.தங்கமணி, மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் சத்யமூர்த்தி, வேளாண்மை நிர்வாக அலுவலர் இளங்கோவன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் சென்னகிருஷ்ணன், கிழக்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் வழக்கறிஞர்.அசோக்குமார், சந்தை பணியாளர் பாளை.அன்பழகன் மற்றும் கழகத்தினர், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை தெற்கு மாவட்டம் திருமயம் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமையில் சமத்துவப் பொங்கல் விழா கொண்டாடப்பட்டது. நிகழ்வுகளில் ஒன்றியச் செயலாளர்கள் அழகு.சிதம்பரம், ஆர்.கணேசன் மற்றும் ஆர்.எம்.கருப்பையா, கே.ஆர்.ராமசாமி, சுப.துரைராஜா, முருகேசன், முல்லை ரமேஷ், அண்ணாதுரை மற்றும் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# மயிலம் மத்திய ஒன்றியக் கழக செயல்வீரர்கள் கூட்டம்!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் சிறப்புரை!

மைலம், ஜன. 18 -

விழுப்புரம் வடக்கு மாவட்டம் மயிலம் மத்திய ஒன்றிய தி.மு.க. சார்பில் மயிலத்தில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் ஒன்றிய கழக செயல்வீரர்கள் கூட்டம் நடைபெற்றது.

ஒன்றிய அவைத் தலைவர் பரசுராமன் தலைமை தாங்கினார்.

ஒன்றிய துணை செயலாளர்கள் சங்கர், தமிழரசன், சத்யா, சின்னதுரை, ஆகியோர் முன்னிலை வகித்தனர் ஒன்றிய செயலாளர் தழுதாளிசெழியன் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில்சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் செஞ்சி மஸ்தான்:

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர், இனமானப் பேராசிரியர், முரசொலி மாறன் ஆகியோர் இல்லை. இந்த ஐம்பெரும் தலைவர்களை ஒன்றாக இணைத்து வாழும் வள்ளுவராக முத்து வேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் திராவிட மாடல் ஆட்சியை நடத்துகிறார்.

அந்த வகையில் கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தின் மூலம் முதல மைச்சரின் ஒரே ஒரு கையெழுத்தில் ஒன்னறைகோடி மகளிர் பயன் அடைந்து உள்ளார்கள் என்றால் உலக வரலாற்றில் தமிழ் நாட்டில் மட்டும்தான் இது போன்ற திட்டங்கள் நடைபெற்றுவருவதாக தெரிவித்த அமைச்சர் செஞ்சி மஸ்தான் தமிழ்நாட்டில் புதுவை உட்பட 40 தொகுதிகளிலும் திராவிட முன்னேற்ற கழக கூட்டணி யான இந்திய கூட்டணி வெற்றி பெறும் என்றும் இந்தியாவில் இந்தியா கூட்டணி அமோக வெற்றி பெறும் என அமைச்சர் செஞ்சி மஸ்தான் உறுதி பட தெரிவித்தார்.

இதைத் தொடர்ந்து 500க்கும் மேற்பட்ட தி.மு.க. நிர்வாகிகளுக்கு முழு கரும்புடன் கூடிய பொங்கல் பரிசு தொகுப்பினை அமைச்சர் செஞ்சி மஸ்தான் வழங்கினார்.

கூட்டத்தில் சேலத்தில் நடைபெறும் திமுக இளைஞரணி இரண்டாவது மாநில மாநாட்டில்கழக இளைஞரணி உள்ளிட்ட அனைத்து நிர்வாகிகளும் பெருந்திரளாக பங்கேற்பது எனவும் தமிழ் புத்தாண்டு மற்றும் பொங்கல் விழாவில் கழக செயல்வீரர்களை கௌரப்படுத்துதல் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

முன்னதாக மேலும் மத்திய ஒன்றிய தி.மு.க. சார்பில் நடைபெற்ற தமிழ் புத்தாண்டு சமத்துவ பொங்கல் விழாவை அமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்தார்.

கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர், மாநில தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சி சிவா , மயிலம் வடக்கு ஒன்றிய செயலாளர் மணிமாறன், பொதுக்குழு உறுப்பினர் வீடு ரவி,மாவட்ட பிரதிநிதிகள் ஜெயராமன் ஆர்.சி. துரை, பிரகாஷ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மணலி – எண்ணூர் பகுதியில் வசிக்கும் மக்களின் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும்

# வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான புதிய திட்டங்கள்!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, ஜன. 18 -

தமிழ்நாட்டில், வட சென்னை பகுதியின் வளர்ச்சிக்கென "வடசென்னை வளர்ச்சித் திட்டம்" தொடர்பான அறிவிப்பு, 2023 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் வெளியிடப்பட்டு, தற்போது விரிவான செயல் திட்டம் தமிழ்நாடு அரசால் தயாரிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில், மணலிஎண்ணூர் பகுதியில் வசிக்கும் மக்களின் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் வாழ்வாதாரத்தைக் கருத்தில்கொண்டு, தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆணையிட்டுள்ளது.

அதனடிப்படையில், விரிவான வளர்ச்சித் திட்டம் தயாரிக்கும் வரை, கீழ்க் கண்ட திட்டங்களை உடனடியாக செயல்படுத்த அரசு முடிவு செய்துள்ளது:

மாசு சுமை, உமிழ்வு விதிமுறைகள், கழிவுகள் மற்றும் பறக்கும் சாம்பல் வெளியேற்றம் மற்றும் இப்பகுதியில் உள்ள நீர்நிலைகளில் நீரின் தரத்தை கண்காணிப்பதற்காக, சிறப்பாக ஒரு மாசு கண்காணிப்பு மற்றும் கட்டளை மையத்தை அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. மிகவும் நவீன தானியங்கி அமைப்புகள் மூலம் மாசுக் கட்டுப்பாட்டைக் கண்காணிக்க இந்த மையம் தகுதிவாய்ந்த ஊழியர்களைக் கொண்டிருக்கும். இந்த மையத்திற்கு உதவியாக மணலி மற்றும் எண்ணூர் பகுதியில் பிரத்யேகமாக இரண்டு பறக்கும் படைகள் நிறுத்தப்படும்.

மாசு கண்காணிப்பு மற்றும் கட்டளை மையம் ஒரு அவசரகால நடவடிக்கைக் குழுவை அமைக்கும், இது வழக்கமான மாதிரி பயிற்சிகள், சமூக விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், சுகாதார முகாம்கள் போன்றவற்றை ஏற்பாடு செய்வதற்கு பொறுப்பாகும்.

இப்பகுதியில் உள்கட்டமைப்பு மற்றும் வளர்ச்சி இடைவெளிகளை நிவர்த்தி செய்வதற்காக மணலிஎண்ணூர் மறுசீரமைப்பு மற்றும் புத்துணர்வு நிறுவனம் (ManaliEnnore Restoration and Rejuvenation CompanyMERRC) என்ற சிறப்பு நோக்க நிறுவனத்தை அரசு ஏற்படுத்தும். மணலிஎண்ணூர் பகுதியில் பெருமளவிலான நகர்ப்புற பசுமையாக்குதல், நீர்நிலைகளைப் புனரமைத்தல், திடக்கழிவு மேலாண்மை, மாசுக் கட்டுப்பாட்டு நடவடிக்கை, சதுப்புநில மறுசீரமைப்பு மற்றும் சமூக உட்கட்டமைப்பு மேம்பாடு ஆகியவற்றை மேற்கொள்ள ஒரு சிறப்பு நிதி உருவாக்கப்படும். இந்த சிறப்பு நிதிக்கான ஆதாரம், அரசின் பல்வேறு திட்டங்கள் மூலமும், தொழில் நிறுவனங்களின் சமூகப் பொறுப்பு நிதியின் மூலமும் உருவாக்கப்படும்.

இப்பகுதியில் உள்ள அனைத்து சிவப்பு வகை தொழிற்சாலைகளின் பாதுகாப்பு தணிக்கையை தொழில் பாதுகாப்பு இயக்குநரகம், நிபுணத்துவம் வாய்ந்த நிறுவனம் ஒன்றின் மூலம் மேற்கொள்ளும்.

திருவொற்றியூரில் 50 படுக்கைகள் கொண்ட பொது மருத்துவமனை மற்றும் 100 படுக்கைகள் கொண்ட நகர்ப்புற சமுதாய நல மையம் ஆகிய இரண்டு அரசு மருத்துவமனைகள் ஏற்கனவே செயல்பட்டு வருகின்றன. உடனடி மற்றும் மேம்பட்ட சுகாதார சேவைகளை வழங்குவதற்காக, கத்திவாக்கம் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் 10 படுக்கைகளுடன் தரம் உயர்த்தப்படும்.

இயந்திரமயமாக்கப்பட்ட துப்புரவுப் பணி, நீர் தெளிப்பான்கள் மூலம் தூசி மாசுபாட்டைக் குறைப்பதற்கான விரிவான திட்டத்தை உள்ளடக்கிய திடக்கழிவு மேலாண்மைப் பணிகளை பெருநகர சென்னை மாநகராட்சி மேற்கொள்ளும்.

தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தில் இருந்து சாம்பல் அணைக்கட்டுக்கு ஈரமான சாம்பலை எடுத்துச் செல்லும் குழாய்கள் புதுப்பிக்கப்படும்.

மீன்வளத் துறை, உள்ளூர் மீனவ சமூகங்களை ஈடுபடுத்தி நிபுணத்துவ முகமைகளின் உதவியுடன் இப்பகுதியில் நிலையான மீன்பிடிப்புக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

எண்ணூர் கழிமுகத்தில் உள்ள சதுப்பு நிலங்களை புனரமைக்கும் பணிகளை வனத்துறை தொடங்கியுள்ளது. இப்பணிகளை குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் முடிக்கவும், புலம்பெயர்ந்த பறவைகளுக்கு உதவும் வகையில் இப்பகுதியில் உள்ள தாவரங்கள் மற்றும் விலங்கினங்களை மீட்டெடுக்கவும் இத்துறை தொடர்ந்து நடவடிக்கை எடுக்கும்.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மூலம் எண்ணூர் மணலி பகுதிகளில் உள்ள தொழில்சார் திறன் தேவைகளை கண்டறிந்து இளைஞர்களின் கல்வித் தகுதிக்கு ஏற்ப தலை சிறந்த நிறுவனங்களுடன் இணைந்து பயண ஊக்கத் தொகையுடன் கூடிய கட்டணமில்லா திறன் பயிற்சி வழங்கப்படும்.

அம்மோனியா வாயு கசிவு குறித்து விசாரிக்க படும் விசாரணையில், விசாரணை அறிக்கை கிடைக்கப் பெற்றவுடன், சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப் படும்.

அமோனியா வாயு கசிவு குறித்து ஏற்கெனவே ஒரு தொழில்நுட்பக் குழு அமைக்கப்பட்டு, உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. அக்குழுவின் இறுதி அறிக்கை பெறப்பட்ட பின்னர் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படும்.

தமிழ்நாட்டு மக்களின் நலனையும் நல்வாழ்வையும் இரு கண்களாகக் கருதி, கண்ணும் கருத்துமாகச் செயல்பட்டு வரும் தமிழ்நாடு அரசு, மேலே குறிப்பிடப்பட்டுள்ள திட்டங்களை முழுவீச்சில் செயல்படுத்திடத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் விரைந்து மேற்கொள்ளும் என்று தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப் பட்டுள்ளது.



புதுக்கோட்டை மாவட்ட கழக அலுவலகத்தில் , "சமத்துவப் பொங்கல் விழா மாவட்ட கழகச் செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில் அனைத்து சமய மத குருமார்கள் முன்னிலையில் நடைபெற்றது. விழாவில் நகர கழகச் செயலாளர் ஆ.செந்தில், மாவட்ட அவைத் தலைவர் அரு.வீரமணி, மாவட்ட துணைச் செயலாளர்கள் பெ.இராஜேஸ்வரி, எஸ்.என்.கருப்பையா, மாவட்டப் பொருளாளர் எம்.லியாகத்அலி, மாநில வர்த்தகர் அணி துணைச் செயலாளர் செ.அசோக் பாண்டியன், ஒன்றிய கழகச் செயலாளர்கள் தவ.பாஞ்சாலன், சி.சண்முகம், அ.ரெத்தினம், மாவட்ட ஊராட்சித் தலைவர் ஜெயலெட்சுமி தமிழ்ச்செல்வன், செந்தாமரை பாலு, வி.ஜி.ஆர்.மணிவண்ணன், எஸ்.வி.ஆர்.ஜெய் ஸ்டாலின், டாக்டர் மு.க.முத்துக்கருப்பன், பெ.தெய்வானை, ராயல் ஆர்.சபா, ஜினி, ஜெயந்தி, களபம் செந்தாமரை, ஓவியா மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



கும்பகோணம் சட்டமன்றத் தொகுதியின் சார்பாக, சமத்துவப் பொங்கல் விழா, கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில், சிறப்பாக கொண்டாடப்பட்டது. விழாவில், கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் சாக்கோட்டை க.அன்பழகன் நல உதவிகள் வழங்கினார். நிகழ்ச்சியில், துணை மேயர், சு.ப.தமிழழகன், தி.கணேசன், எஸ்.கே.முத்துசெல்வம், ஜெ.சுதாகர், ஆர்.கே.பாஸ்கர் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



நீலகிரி மாவட்டம் உதகை அரசு தாவரவியல் பூங்கா சாலை முக்கோணம் வடிவுள்ள இடத்தில், 200 ஆண்டுகளுக்கு முன்பு உதகை நகரினை கண்டறிந்து கட்டமைத்த "ஜான் சல்லிவன் அவர்களின் நினைவு தினத்தை முன்னிட்டு அவரது திருவுருவச் சிலைக்கு சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் 16.01.2024 அன்று மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, மாவட்ட ஊராட்சித் தலைவர் மு.பொன்தோஸ் உட்பட பலர் உள்ளனர்.

200 ஆண்டுகளுக்கு முன்

# ஊட்டி நகரை கண்டறிந்த ஜான் சல்லிவன் சிலைக்கு மாலை!

## அமைச்சர் கா.ராமச்சந்திரன் பங்கேற்றார்!

ஊட்டி, ஜன. 18 -

ஊட்டி நகரினை கண்டறிந்து கட்டமைத்த 'ஜான் சல் லிவன்': நினைவு தினத்தை

முன்னிட்டு அவரது சிலைக்கு அமைச்சர் கா. ராமச்சந்திரன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

200 ஆண்டுகளுக்கு முன்பு ஊட்டி நகரினை கண்டறிந்து கட்டமைத்த ஜான் சல்லிவனின் திருவுருவ சிலைக்கு அன்னா ரின் நினைவு தினத்தை முன்னிட்டு சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராம ச்சந்திரன் நேற்று மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். மாவட்ட கலெக்டர் மு.அ ருணா முன்னிலை வகித்த நிகழ்ச்சியில் அமைச்சர் தெரிவித்ததாவது:

நீலகிரி மாவட்டத்தில் 200 ஆண்டுகளுக்கு முன்பு ஊட்டி நகரினை கண்டறிந்து கட்டமைத்த ஜான் சல்லிவன் அவர்கள் ஜூன் 15 ஆம் நாள் இங்கிலாந்தின் தலைநகர் இலண்டனில் பிறந்தார். ஜான் சல்லிவன் அவர்கள் 1815 முதல் 1830 வரை கோயமுத்தூர் மாவட்ட ஆட்சிய ராக பணிபுரிந்துள்ளார். இவர்

இயற்கை சுற்றுச்சூழலில் மிகுந்த ஆர்வம் கொண்ட வர். இவர் முயற்சியா லேயே ஊட்டி ஏரி உருவாக்கப்பட்டது. ஜான் சலீவன் 16.01.1855 அன்று இயற்கை எய்தினார்.

நீலகிரி மாவட்டத்தின் ஊட்டி நகரினை 200 ஆண்டு களுக்கு முன்பு கட்டமைத்த பெருமைக்குரிய ஜான் சல்லிவன் அவர்களை நினைவு கூரும் வகையில் ஊட்டி அரசு தாவரவியல் பூங்கா சாலையோரம் முக்கோண வடிவுள்ள இடத்தில் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் இரண்டு அடி உயரத்தில் மார் பளவு வெண்கல சிலை அமைக்கப்பட்டு தமிழ்நாடு முதலமைச்சரால் 21.05.2022 அன்று திறந்து வைக்கப்பட்டது. ஜான் சல்லிவன் அவர்களின் நினைவு நாளை நினைவு கூரும் வகையில் அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது என்றார். முன்னதாக, சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் ஊட்டி தமிழகம் அரசு விருந்தினர் மாளி கையில், மாவட்ட ஊராட்சி தலைவரின்; பயன்பாட்டிற் காக ரூ.18 இலட்சம் மதிப்பில் புதிய வாகனத்தின் சாவியை வழங்கி, கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்வுகளில், மாவட்ட ஊராட்சித்தலைவர் மு.பொன்தோஸ், நகர் மன்ற துணை தலைவர் திரு.ரவிக்குமார், மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் ஜார்ஜ், வட்டாட்சியர் சரவணகுமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



பொள்ளாச்சி நகரத்தில் நடைபெற்ற தமிழர் திருநாள் தமிழ் புத்தாண்டு பொங்கல் பரிசு வழங்குகின்ற நிகழ்ச்சியில் மாவட்ட கழகச் செயலாளர் தளபதி முருகேசன் தலைமையில் நடைபெற்றது. இதில் ஆதி திராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் திப்பம்பட்டி ஆறுசாமி கலந்து கொண்டு பேசினார். நகர மன்ற தலைவி திருமதி சியாமளா நவநீதகிருஷ்ணன், நகர மன்ற உறுப்பினர் கந்த மனோகரி, நகரத் துணைச் செயலாளர் சா.தர்மராஜ், தலைமைச் செயற்குழு உறுப்பினர் முக முத்து, வழக்கறிஞர் அமைப்பாளர் மருதராஜ், மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு துணை அமைப்பாளர் வழக்கறிஞர் பஞ்சலிங்கம், தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகி பல்லடம் ரோடு விவேக் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**ச. சுப்பையா**
**சனவரி 16 (1980)**



**சங்கரன்கோவில் சட்டமன்றத் தொகுதியில் 1971 மற்றும் 1977 ஆகிய இரண்டு முறை கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றதோடு, கழகப் பணியாற்றியவர்.**

**சங்கரன்கோவில் நகர்மன்ற உறுப்பினராகவும் – நகர கூட்டுறவு வீட்டு வசதி சங்கத் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**"எந்த நிலையிலும் நிலை குலையாத – நெருக்கடி காலத்திலும் (மிசா) நிலைமாறாத தம்பிதான் பண்பாளர் ச.சுப்பையா" என தலைவர் கலைஞர் அவர்கள், அவரது இரங்கல் கூட்டத்தில் குறிப்பிட்டார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை முகாம் அலுவலகத்தில் (15.1.2024) அன்று தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை முன்னிட்டு, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் சு. முத்துசாமி, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு மற்றும் அமைச்சர் பெருமக்கள் சந்தித்து பொங்கல் வாழ்த்துப் பெற்றனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை முகாம் அலுவலகத்தில் (15.1.2024) அன்று தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை முன்னிட்டு, சட்டத் துறை அமைச்சர் எஸ். இரகுபதி, மீன்வளம் மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன் ஆகியோர் சந்தித்து பொங்கல் வாழ்த்துப் பெற்றனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை முகாம் அலுவலகத்தில் 15.1.2024 அன்று தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை முன்னிட்டு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் அவர்கள் சந்தித்து பொங்கல் வாழ்த்துத் தெரிவித்தார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை (15.1.2024) அன்று தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை முன்னிட்டு, கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் சந்தித்து பொங்கல் வாழ்த்துப் பெற்றார்.





பொங்கல் திருநாளை முன்னிட்டு சென்னையில் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் முன்னெடுப்பில் நடைபெற்று வரும் “சென்னை சங்கமம் – நம்ம ஊரு திருவிழா” நிகழ்ச்சியில் 1500 நாட்டுப்புற கலைஞர்கள் பங்கேற்று கலை நிகழ்ச்சிகளை நடத்திவரும் நிலையில், 16.01.2024 செவ்வாய்க்கிழமை – அன்று சென்னை சேப்பாக்கத்தில் உள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதி வளாகத்தில் சென்னை சங்கமம் நிகழ்ச்சியில் பங்கேற்றுள்ள நாட்டுப்புற கலைஞர்களுடன் பொங்கல் விழா கொண்டாடி, அவர்களுக்கு இனிப்புகள் மற்றும் புத்தாடைகளை தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக்குழு துணைத் தலைவருமான கனிமொழி கருணாநிதி வழங்கினார். உடன், கலை பண்பாட்டுத் துறை இயக்குநர் காந்தி, கலை பண்பாட்டுத்துறை இணை இயக்குநர் சிவசௌந்திரவல்லி, கலை பண்பாட்டுத்துறை துணை இயக்குநர் ஹேமநாதன், மக்கள் தொடர்பு அலுவலர்கள் பதி, பிரைட் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.





அய்யன் திருவள்ளுவர் திருநாளை முன்னிட்டு சென்னை, வள்ளுவர் கோட்டத்தில் அமைந்துள்ள அய்யன் திருவள்ளுவர் திருவுருவச் சிலைக்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர். பிரியா, தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந. அருள் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் மாநில மனித உரிமை ஆணையம்.



# 53 இடம் பொருள் கலைஞர்



## மாநில மனித உரிமைகள் ஆணையம்

### மக்களின் உரிமை காத்த முன்னெடுப்பு!

சுவாமி ஆனந்த தீர்த்தர் என்ற காந்தியவாதி ஒருவர் இருந்தார். கேரளத்தைப் பூர்வீகமாகக் கொண்ட அவர், தமிழ்நாட்டில் சாதி வன்கொடுமைகளுக்கு எதிராகப் போராடினார். அவர், 'அகில இந்திய அரிஜன சேவா சங்க' மண்டல அதிகாரியாக இருந்தபோது, மதுரை மேலூரில் நடைபெற்ற கொடுமை பற்றி, 1952 மார்ச் மாத 'சண்டே டைம்ஸ்' இதழில் கட்டுரையாக எழுதி இருக்கிறார்.

டீக்கடைகளிலே 'இரட்டைக் குவளை' முறை இருந்ததையும், தாழ்த்தப்பட்ட சாதி வாலிபர் ஒருவர், ஆதிக்க சாதிக்காரர்களுக்கான குவளையை எடுத்து, அதிலே தேநீர் கொடு என்று கேட்டதற்காக, அவர் தாக்கப்பட்டதையும் கண்ட ஆனந்த தீர்த்தர், அந்தக் கொடுமையை எதிர்த்து மாஜிஸ்திரேட் கோர்ட்டில் வழக்குத் தொடுக்கிறார். அந்தக் கொடுமைக்கு விதிக்கப்பட்ட தண்டனை வெறும் பத்து ரூபாய் அபராதம்தான்.

இதனால் மனம் கொதித்துப்போன ஆனந்த தீர்த்தர், இரண்டு தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த வாலிபர்களைத் தன்னோடு அழைத்துக் கொண்டு மற்றொரு கிராமத்துக்குச் சென்று, அங்கே தானே முன்னின்று தேநீர் கேட்கிறார். தர மறுத்ததோடு, அவர்களைத் தாக்குகிறார்கள் ஆதிக்க சாதியினர். அதன் பிறகு நடந்தவை அவரது சொற்களில்...

"தாழ்த்தப்பட்ட வகுப்பினர் தாக்கப்பட்டது தெரிய வந்தால், தங்களுக்கு பாதிப்பு வரும் என்று கருதிய அந்த கிராமத்தினர், தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த தோழர்கள், தங்கள் ஊர் கோவிலிலிருந்து சில பொருட்களைத் திருடிவிட்டார்கள் என்றும், அந்தப் பொருட்களை நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த கக்கன் அவர்களின் தந்தையார் பூசாரி கக்கனும், இன்னொரு உறவினரான எட்டி கக்கனும் 'அந்தப் பொருட்களைத் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த வாலிபர்கள்தான் திருடினார்கள்' என்று சொல்லி அவற்றை கிராமத் தலைவரிடம் கொடுக்க வேண்டும் என்றும் அந்தக் கிராமத்தினர் வற்புறுத்தினார்கள். அவ்வாறு அந்தப் பொய் வழக்குக்கு அவர்கள் இருவரும் துணை போகாவிட்டால், கக்கனுடைய தந்தைக்கே ஆபத்து வரும் என்ற நிலை இருந்தது".

ஆனந்த தீர்த்தரின் கட்டுரையில் இடம்பெற்றிருக்கும் மேற்கண்ட வரிகளை, அண்ணல் அம்பேத்கர் தனது நூல் ஒன்றில் பதிவு செய்துள்ளார். அது, 'டாக்டர் பாபா சாகேப் அம்பேத்கரின் எழுத்துகளும் பேச்சுகளும்' என்ற புத்தகத்தில், ஐந்தாவது தொகுப்பில் இடம்பெற்றுள்ளது. நேர்மைக்கும் எளிமைக்கும் பெயர் பெற்ற, நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த கக்கனின் தந்தைக்கே இந்த நிலை என்றால், சாமானியர்களின் நிலை பற்றிக் கேட்கவே வேண்டாம்.

### மனித உரிமைக் கருத்தரங்கு

1997 நவம்பர் 5 அன்று, சென்னை கலைவாணர் அரங்கில், 'மனித உரிமை' கருத்தரங்கைத் தொடங்கி வைத்து முத்தமிழறிஞர் கலைஞர் ஆற்றிய உரையில், "1947 ஆம் ஆண்டிலே நமக்குச் சுதந்திரம் கிடைத்துவிட்டதென்றாலும் கூட, இன்னமும் மனித உரிமை முற்றிலுமாகக் கிடைக்கவில்லை. மனித சுதந்திரம் கிடைக்கவில்லை" என்று சொல்லி, ஆனந்த தீர்த்தரின் அனுபவத்தை உதாரணமாகக் காட்டினார். அதைச் சொல்லிவிட்டு, மனித உரிமை பாதுகாக்கப்படுவது தொடர்பான வரலாற்றையும் சொன்னார் கலைஞர்.

"1968 ஆம் ஆண்டு டெக்ரான் மாநகரத்தில் கூடிய ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச மனித உரிமை மாநாடு தனது பிரகடனத்தில், 'மனித உரிமையையும், அடிப்படை உரிமைகளையும் பிரிக்க முடியாது. சமூக, பொருளாதார, கலாச்சார உரிமைகளை ஒருவர் அனுபவிக்காமல் அரசியல் மற்றும் சிவில் உரிமைகளை அடைய முடியாது' என்று வலியுறுத்தியுள்ளது. அதைத் தொடர்ந்துதான் பல நாடுகளிலே மனித உரிமை ஆணையங்கள் உருவாயின.

குறிப்பாக, நம்முடைய இந்தியாவில் 1993 ஆம் ஆண்டு அக்டோபர் 12 ஆம் தேதியன்று, 'தேசிய மனித உரிமை ஆணையம்', நீதிபதி ரெங்கநாத் மிஸ்ரா அவர்களுடைய தலைமையிலே அமைக்கப்பட்டது. அந்த ஆணையத்தின் உறுப்பினர்களிலே ஒருவராக இருந்தவர் நம்முடைய தமிழக ஆளுநராக இன்றைக்கு இருக்கின்ற செல்வி பாத்திமா பீவி அவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது" என்றார்.

தமிழ்நாடு மாநில மனித உரிமை ஆணையம் அமைக்கப்பட்ட உடனே, முதற்கட்டமாக அந்த ஆணையம் வேலூர், சேலம், மதுரை, திண்டுக்கல், ஈரோடு ஆகிய ஐந்து மாவட்டங்களுக்குச் சென்று, அந்தப் பகுதிகளில் இருந்த மாற்றுத் திறனாளிகள் மற்றும் விளிம்பு நிலை மக்களின் பிரச்சினைகளை ஆராய்ந்து, அரசுக்கு அறிக்கை ஒன்றை அனுப்பியது. தவிர, பொதுமக்களிடமிருந்தும் புகார் மனுக்கள் பெறப்பட்டன. ஆணையம் அமைக்கப்பட்ட சில நாட்களிலேயே 726 மனுக்கள் பெறப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

### மதிக்கப்படாத கடிதம்

அந்த தேசிய மனித உரிமைகள் ஆணையத்திடமிருந்து மாநில அரசுகளுக்கு 1993 டிசம்பர் 14 ஆம் தேதி கடிதம் ஒன்று வந்தது. அதில், காவல் நிலையங்களில் நடைபெறும் மரணங்கள், பாலியல் வன்கொடுமைகள் உள்ளிட்ட சம்பவங்கள் நடைபெற்றால், அதுதொடர்பான அறிக்கைகளை உடனடியாக தேசிய மனித உரிமை ஆணையத்துக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டிருந்தது.

ஆனால் அப்படி அறிக்கைகள் அனுப்புவதற்கு முறையான நிர்வாகக் கட்டமைப்பு இல்லாமல் இருந்தது. அன்று, இந்தியாவில் 'மாநில மனித உரிமைகள் ஆணையம்' என்பவை ஏழெட்டு மாநிலங்களில்தான் ஏற்படுத்தப்பட்டிருந்தன. இதைப் பற்றி கலைஞர் தன் உரையில் கூறும்போது, "தமிழ்நாட்டிலே 'மே' (MAY) என்ற அந்தச் சொல்லைப் பயன்படுத்தி அதை அமைக்காமலேயே இருந்துவிட்ட ஒரு சூழ்நிலை கடந்த ஆட்சியிலே இருந்தது" என்று சுட்டிக்காட்டினார்.

### கழக அரசின் கொள்கை

1996 ஆம் ஆண்டு மே 13 ஆம் தேதி தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்றது. அடுத்து வந்த 23 ஆம் தேதி, அன்றைய ஆளுநர் டாக்டர் எம்.சென்னா ரெட்டி, கழக அரசின் மனித உரிமைக் கொள்கை குறித்து தனது உரையில் இப்படிக் குறிப்பிட்டார்:

"நமது மாநிலத்தில், குறிப்பாக புறநகர்ப் பகுதிகளில் சமூக விரோத ஆதிக்க சக்திகளால் மக்களின் உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பற்ற நிலை ஏற்பட்டு வன்முறைக் குற்றங்கள் பெருகி, மக்களுக்குக் காவல்துறை மீதிருந்த நம்பிக்கை தளர்ந்துள்ள சூழலை இந்த அரசு மிகுந்த கவலையுடன் கவனித்து 'வேலியே பயிரை மேயும்' வேதனையைத் தடுத்து நிறுத்தவும் குற்றங்கள் புரிய 'அரசியல்' என்பது ஒரு பாதுகாப்பான இடம் என்ற அவலநிலையை அறவே போக்கவும், காவல்துறை என்பது மக்களுக்கு நல்லுறவுத் துறையாகவும், பாரபட்சமற்ற நடுநிலைத் துறையாகவும் மாற்றப்பட நடவடிக்கைகள் உரிய முறையில் எடுக்கப்படும். மனித உரிமைகள் மீறல் பற்றிய புகார்களை விசாரணை செய்ய 'மாநில மனித உரிமைகள் ஆணையம்' அமைக்கப்படும் என்று குறிப்பிட்டார்.

அதன்படி, தமிழ்நாட்டில் இந்த ஆணையம் 1996 டிசம்பர் 20 அன்று அமைக்கப்பட்டது. தொடர்ந்து, 1997 ஏப்ரல் 17 அன்று, அந்த ஆணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களை நியமனம் செய்து ஆணை பிறப்பிக்கப்பட்டது. 25 ஆண்டுகளுக்கும் மேலாக அந்த ஆணையம் மக்களின் உரிமைகளைக் காத்து வருகிறது. ஆம்... இறந்தும் மக்களைக் காக்கிறார் கலைஞர்..!

...வலம் வருவோம்

---

## இந்தோனேசிய இந்துயிசம்!

இஸ்லாமியர்கள் அதிகம் வாழும் நாடான இந்தோனேசியாவில் இந்துக்களும் சிறிய அளவில் இருக்கின்றனர். அவர்கள் கி.பி. 1-ஆம் நூற்றாண்டில் இந்தியாவிலிருந்து குடிபெயர்ந்தவர்கள். சமீபத்தில் இந்தோனேசியாவுக்குப் பயணம் செய்திருந்த, கொலம்பியா பல்கலைக்கழகத்தின் சமூகவியல் கொள்கைத் துறைப் பேராசிரியர் நீரஜ் கவுசால், இந்தோனேசியாவில் வசிக்கும் இந்துக்களின் வாழ்க்கைச் சூழல், இறை நம்பிக்கை, இந்துயிசம் குறித்து, ஆங்கில நாளேடு ஒன்றில் எழுதியுள்ளார்.

"சாதியின் பெயரிலான தீண்டாமைக் கொடுமைகள் அங்கு கொஞ்சம் கூட இல்லை. தாழ்த்தப்பட்ட சமூகம் என்ற ஒன்றும் அங்கே இல்லை. பல்வேறு சமூகங்களைச் சேர்ந்தவர்கள் அங்குள்ள கோயில்களில் இறைப்பணி ஆற்றுகின்றனர். ஆகமத் தடையெல்லாம் அங்கே கிடையாது. எல்லா கோயில்களிலும் சாதி, மத, பாலின பேதமின்றி எல்லோரும் வழிபடலாம். எந்தக் காலத்திலும் ஏற்றத்தாழ்வுகள் இருந்ததற்கான சான்றுகளே அங்கு இல்லை. 75 சதவிகிதத்துக்கும் அதிகமான திருமணங்களில், தங்களுக்கான இணையைத் தாங்களே தேர்வு செய்துகொள்கின்றனர்.

ஆணவப் படுகொலைகள் என்ற பேச்சுக்கே இடமில்லை. வேலை வாய்ப்புகளில் பெண் தொழிலாளர்களின் பங்கேற்பு, இந்திய சராசரியே 24 சதவிகிதம்தான். ஆனால், இந்தோனேசிய இந்துப் பெண்களில் 50 சதவிகிதத்துக்கும் அதிகமானோர் வேலைவாய்ப்புகளில் பங்களிப்பு செய்கின்றனர்" என்றெல்லாம் ஆச்சரியங்களை அடுக்கியிருக்கிறார் நீரஜ் கவுசால். இதையெல்லாம் உணர்வார்களா இந்திய இந்துத்துவ வாதிகள்..?

## :ப்ளாஷ்பேக்



## பெற்றோருடன் புகைப்படம்!



எழிலரசி விஜயகுமார்

1983 ஜனவரி 20 ஆம் தேதி, என் தந்தை வழக்கறிஞராகப் பதிவு செய்து அங்கீகரிக்கப்பட்ட காரணத்தால், தலைவர் கலைஞர் அவர்களை சந்தித்து வாழ்த்துப் பெற குடும்பத்தாருடன் கோபாலபுரம் அழைத்துச் சென்றார். தலைவர் கலைஞர்தான் எனக்குப் பெயர் சூட்டினார். அப்போது கலைஞர் அவர்கள் திருமணம் ஒன்றுக்குக் கிளம்பிக் கொண்டிருந்த நிலையில், அவசரமாக எடுக்கப்பட்ட புகைப்படம். எந்தச் சூழ்நிலையிலும் தொண்டர்களை அரவணைக்கும் தலைவரின் பாச வெளிப்பாடு. கைக்குழந்தையாக நான். என் தாயார் பிச்சையம்மாளும் உடனுள்ளார்.

**-எழிலரசி விஜயகுமார், அம்மாபேட்டை, சேலம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473, மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### அண்ணாவின் முதல் சிறைவாசம்

**1938 ஆம் ஆண்டு ஜூன் 10 ஆம் தேதி சென்னை ஆயிரம்விளக்கு பகுதியில் உள்ள கதீட்ரல் சாலையில் இந்தி எதிர்ப்புக் கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் மக்களைத் தூண்டி விடும் வகையில் அண்ணா பேசினார் எனக் குற்றம்சாட்டப்பட்டு செப்டம்பர் 21-ஆம் தேதி கைது செய்யப்பட்டார். 4 மாத வெறுங்காவல் தண்டனை அண்ணாவுக்கு வழங்கப்பட்டது. அண்ணாவின் முதல் சிறைவாசம் இதுவே.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 361




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131